இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 56 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 18 – வியாழக்கிழமை 05 அக்டோபர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 56 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 18 - Thursday 05 October 2023 - Dak 10 Pages ₹ 5.00



## தேசிய மருத்துவ ஆணைய அறிவிப்பை உடனே நிறுத்தாவிட்டால் எதிர்காலத்தில் தமிழ்நாட்டுக்கு

# புதிய மருத்துவமனைகள் வருவதற்கான வாய்ப்பு போய்விடும்!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, அக். 5 -

**புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவது தொடர்பான தேசிய மருத்துவ ஆணையத்தின் அறிவிப்பினை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் இன்னும் தொடங்கப்படாத நிலையில், தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்ட அறிவிப்பினால், தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதில் சிக்கல் எழுந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவது தொடர்பாக தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பினை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

**புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க சிக்கல் வரும்!**

தேசிய மருத்துவ ஆணையம் (National Medical Commission) சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பினால், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய கட்டுப்பாடு விதிப்பதன் மூலம், எதிர்காலத்தில் மருத்துவத் துறையில் புதிய மருத்துவமனைகளும், புதிய முதலீடுகளும் தமிழ்நாட்டிற்கு வருவதற்கான வாய்ப்பு முற்றிலுமாக இல்லாமல் போய்விடும்.

தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பினை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும், இதுதொடர்பாக மாநில அரசுகளுடன் உரிய ஆலோசனைகளை மேற்கொள்ளத் தேவையான அறிவுரைகளை ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்திற்கு வழங்கிட வேண்டுமென்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமருக்கு முதல்வர் எழுதியுள்ள கடிதம் வருமாறு: -

தேசிய மருத்துவ ஆணையம் (National Medical Commission) சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பினைப் பற்றி தங்களின் கனிவான கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்த அறிக்கையின்படி, இளநிலை மருத்துவக் கல்விக்கான தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய விதிமுறைகளில், 10 லட்சம் மக்கள்தொகைக்கு அதிகபட்சமாக 100 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும், அதற்கும் கூடுதலான மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ள மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளோ,

> **“இளநிலை மருத்துவக் கல்விக்கான தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய விதிமுறைகளில், 10 லட்சம் மக்கள்தொகைக்கு அதிகபட்சமாக 100 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும், அதற்கும் கூடுதலான மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ள மாநிலங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளோ, மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களோ அனுமதிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது மாநில உரிமைகள் மீதான நேரடி தாக்குதல் ஆகும்.”**

மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களோ அனுமதிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது மாநில உரிமைகள் மீதான நேரடி தாக்குதல் ஆகும்.

மேலும் பொது சுகாதாரத் துறையிலும், பொது சுகாதார கட்டமைப்பிலும் பெரிய அளவில் முதலீடு செய்துள்ள மாநிலங்களுக்கு வழங்கப்படும் தண்டனையாகும். தமிழ்நாடு போன்ற முன்னேறிய மாநிலங்கள் பல ஆண்டுகளாகவே பொது சுகாதாரத் துறையை மேம்படுத்தி வருகிறது. அதனால் தான் இங்கே மருத்துவர்கள், செவிலியர்கள் பற்றாக்குறை இல்லாமல் இருக்கிறது. சென்னை இந்தியாவின் மருத்துவ தலைநகரம் என்றளவுக்கு உயர்ந்துள்ளது.

**மக்கள் தொகைக்கேற்ப மருத்துவ இடங்கள் என்ற நிபந்தனை சரியல்ல!**

பொதுத் துறை மட்டுமல்லாது தனியார் துறையிலும், நமது தேர்ந்த மருத்துவ நிபுணர்கள் தமிழ்நாடு மட்டுமல்லாது இந்தியாவின் பிற மாநில மக்களுக்கும் சிறந்த மருத்துவத்தை தருகின்றனர். இதனால் தரமான சுகாதார சேவைகளுக்கான தேவை தமிழ்நாட்டில் மென்மேலும் அதிகரித்துள்ளது. இந்தச் சூழலில் புதிய மருத்துவ கட்டமைப்புகள் மிக மிக அவசியம். எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு இவை அமைக்கப்பட வேண்டும். மக்கள் தொகைக்கு ஏற்ப மருத்துவ இடங்கள் என்று நிபந்தனை விதிப்பது பொருத்தமானதாக இல்லை.

மேலும், புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதற்கான காரணங்கள் ஏற்புடையதாக இல்லை. மருத்துவர் மக்கள் விகித்தாரம் பற்றி சுட்டிக்காட்டியுள்ளார்கள். தமிழ்நாட்டில் போதுமான அளவு மருத்துவர் மக்கள் விகிதாச்சாரம் இருந்தாலும்கூட சில மாவட்டங்களில் மருத்துவர் மக்கள் விகிதாச்சாரத்தில் பற்றாக்குறை இருக்கத்தானே செய்கிறது. இந்தப்பிரச்சினைக்கு பின் தங்கிய பகுதிகளில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதே தீர்வாக இருக்க முடியும். புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு மாநில நிலவரங்களைக் கொண்டு தடை விதிப்பது தேவையுள்ள மாவட்டங்களுக்கு அநீதி இழைப்பதாகிவிடும்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் இன்னும் தொடங்கப்படாத நிலையில், தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்ட அறிவிப்பினால், தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதில் சிக்கல் எழுந்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதுபோன்ற கட்டுப்பாடு விதிப்பதன் மூலம், எதிர்காலத்தில் மருத்துவத் துறையில் புதிய மருத்துவமனைகளும், புதிய முதலீடுகளும் தமிழ்நாட்டிற்கு வருவதற்கான வாய்ப்பு முற்றிலுமாக இல்லாமல் போய்விடும் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பினை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக மாநில அரசுகளுடன் உரிய ஆலோசனைகளை மேற்கொள்ளத் தேவையான அறிவுரைகளை ஒன்றிய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்திற்கு வழங்கிட வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்று அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (4.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் இரண்டாவது நாளாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சம்மனுக்குப் பதிலளிக்காமல் இருந்தால் கைது செய்வதா?

# பழிவாங்கும் எண்ணத்துடன் செயல்படக்கூடாது!

### அமலாக்கத்துறைக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்!

*புதுடெல்லி, அக். 5 -*

*பழிவாங்கும் எண்ணத்துடன் செயல்படக்கூடாது என்று அமலாக்கத்துறைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள உச்சநீதிமன்றம், ஒருவரை கைது செய்யும்போது அதற்கான காரணத்தை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.*

*கட்டுமான நிறுவனம் ஒன்று தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் போபண்ணா, சஞ்சய் குமார் அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.*



*அப்போது, அமலாக்கத்துறை அதிக அதிகாரம் கொண்டதாக உள்ளதாகவும், அதன் செயல்பாட்டில் பழிவாங்கும் செயல் வெளிப்படக் கூடாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.*

*அதிக அளவு அக்கறையுடனும், நேர்மையாகவும் அமலாக்கத்துறை செயல்படவேண்டும் என்றும், ஒருவர் சம்மன்களுக்கு பதிலளிக்காமலோ, ஆஜராகாமலோ இருந்தால் அதனை மட்டும் காரணமாகக் காண்பித்து அவரை கைது செய்ய இயலாது என்றும் நீதிபதிகள் கூறினர்.*

*ஒருவர் கைது செய்யப்படும் போது கைதுக்கான காரணத்தை எழுத்து மூலம் தெரிவிக்கும் நடைமுறையை அமலாக்கத் துறை பின்பற்ற வேண்டும் என்று கூறிய நீதிபதிகள், இந்த வழக்கில் அப்படி எழுத்து மூலம் தெரிவிக்காதது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளதாகவும் அமலாக்கத் துறைக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர்.*

*இதையடுத்து, இந்த வழக்கில் அமலாக்கத் துறை குற்றவாளிகளை கைது செய்தது சட்டவிரோதமானது என்று உத்தரவிட்டு கைது செய்யப்பட்டவரை உடனடியாக விடுதலை செய்யவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.*

*கைது முறையானதா என்பதை ஆராயாமல் சிறையில் அடைக்க உத்தரவிட்ட விசாரணை நீதிமன்றத்திற்கும் உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.*

# சிக்கிமில் திடீர் மேக வெடிப்பால் கனமழை!

*காங்டாக், அக். 5 -*

*வடக்கு சிக்கிம் லாச்சென் பள்ளத்தாக்கு பகுதியில் நேற்று அதிகாலை திடீரென்று மேக வெடிப்பு ஏற்பட்டது. இதனால் அங்கு பலத்த மழை பெய்தது.*

*தொடர்ந்து இடைவிடாமல் கொட்டிய மழையால் அப்பகுதியில் வெள்ளம் ஓடியது. குறுகிய நேரத்தில் அதிகளவு மழை பெய்ததால் அங்குள்ள தீஸ்தா ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.*

*பலத்த மழையால் சுங் தாங் அணைக்கு திடீரென்று நீர்வரத்து அதிகமானதால் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.*

*சுமார் 15 முதல் 20 அடி உயரத்திற்கு தண்ணீர் வெளியேறியது. இதனால் தீஸ்தா ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓட தொடங்கியது. நேரம் செல்ல செல்ல ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஊருக்குள் தண்ணீர் புகுந்தது.*

*இதில் சிங்டாம் அருகே பர்டாங்க் பகுதியில் உள்ள ராணுவ முகாமுக்குள் திடீரென்று வெள்ளம் புகுந்தது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த ராணுவ வாகனங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன.*

*ராணுவ முகாமில் இருந்த வீரர்களும் வெள்ளத்தில் சிக்கி அடித்து செல்லப்பட்டனர். அதிகாலையில் ராணுவ வீரர்கள் தூங்கி கொண்டிருந்த நேரத்தில், திடீரென்று வெள்ளம் புகுந்ததால் சுதாரித்து கொள்வதற்குள் பலர் வெள்ளத்தில் சிக்கி கொண்டனர். சிலர் ராணுவ வாகனங்களுடன் வெள்ளத்தில் இழுத்து செல்லப்பட்டனர்.*

*வெள்ளத்தில் சிக்கி 23 ராணுவ வீரர்கள் மாயமாகி உள்ளதை ராணுவம் உறுதிப்படுத்தியது. இதுகுறித்து ராணுவம் வெளியிட்ட அறிக்கையில், சிக்கிமில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 23 ராணுவ வீரர்கள் மாயமாகி உள்ளனர். வீரர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது என்று தெரிவித்துள்ளது.*

## சென்னை மின்சார ரயிலில் ஏ.சி. பெட்டி இணைப்பு!

*சென்னை, அக். 5 -*

*சென்னை கடற்கரை செங்கல்பட்டு வழித்தடத்தில் ஓடும் மின்சார ரயில்களில் தலா 3 ஏசி பெட்டிகளை இணைப்பது தொடர்பாக தெற்கு ரயில்வேக்கு சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம் (கும்டா) பரிந்துரை செய்துள்ளது. இதை ஏற்று, சோதனை அடிப்படையில் முடிவு எடுக்க, ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.*

*சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்தின் அதிகாரிகள் கூறியதாவது:-*

*மின்சார ரயிலில் எல்லா தரப்பு மக்களும் பயணிக்கும் வகையில், வசதிகளை ஏற்படுத்துவது அவசியமாகிறது. குறிப்பாக, நெடுந்தொலைவுக்கு செல்லும் மக்கள்கார், இருசக்கர வாகனத்தைத் தவிர்த்து, மின்சார ரயில்களில் செல்ல, மின்சார ரயில்களில் ஏசிபெட்டிகளைச் சேர்க்க வேண்டும். சென்னை கடற்கரை - செங்கல்பட்டு வழித் தடத்தில் இயக்கப்படும் அனைத்து மின்சார ரயில்களிலும் தலா 1 முதல் 3 ஏசி பெட்டிகள் சேர்க்க ரயில்வேக்கு ஏற்கெனவே பரிந்துரை செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளனர்.*

## இந்திய விமானப்படைக்கு

# 97 தேஜாஸ் ரக போர் விமானங்கள்!

*புதுடெல்லி, அக். 5 -*

*இந்திய விமானப்படையை மேலும் பலப்படுத்தும் வகையில் முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன தேஜாஸ் மார்க்1 ஏ ரக போர் விமானங்களை விமானப்படையில் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.*

*அதன்படி பொதுத்துறை நிறுவனமான இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்திடம் இருந்து 83 தேஜாஸ் மார்க்1ஏ போர் விமானங்களை வாங்க ரூ.48,000 கோடிக்கு ஒப்பந்தம் போடப்பட்டது.*

*கடந்த 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இறுதி செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனம் தேஜாஸ் மார்க்1ஏ போர் விமானங்களை தயாரித்து வழங்கி வருகிறது.*

*இந்த நிலையில் இந்திய விமானப்படைக்கு கூடுதலாக 97 தேஜாஸ் மார்க்1ஏ விமானங்களை வாங்குவதற்கு ரூ.1.15 லட்சம் கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை இறுதி செய்யும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளதாக விமானப்படை தளபதி வி.ஆர்.சவுத்ரி தெரிவித்துள்ளார்.*

*டெல்லியில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், “கூடுதல் 97 தேஜாஸ் மார்க்1ஏ போர் விமானங்களை வாங்குவதன் மூலம் இந்திய விமானப்படையில் சேரும் தேஜாஸ் மார்க்1ஏ போர் விமானங்களின் எண்ணிக்கை 180 ஆக உயரும் இது தவிர 84 சுகோய்30எம்கேஜ போர் விமானங்கள் ரூ.60,000 கோடி செலவில் மேம்படுத்தப்படும்” என கூறினார்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 05-10-2023

# பிளவுபடுத்துவது யார்?

“நான் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன்” -“பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து பிரதமராகப் போட்டியிடும் அளவுக்கு நான் உயர்ந்திருக்கிறேன்” - “பிற்படுத்தப்பட்டவனாக பிறந்ததால் நான் பிரதமர் ஆகியிருப்பது காங்கிரஸ் கட்சிக்குப் பிடிக்கவில்லை” - என்றெல்லாம் சொல்லி வந்த பிரதமர் நரேந்திரமோடி - இப்போது என்ன சொல்ல ஆரம்பித்திருக்கிறார் தெரியுமா?

“ஜாதி அடிப்படையில் நாட்டைப் பிளவுபடுத்துகிறது காங்கிரஸ் கட்சி” என்று குற்றம் சாட்டி இருக்கிறார். ஜாதி அடிப்படையில் நாட்டை காங்கிரஸ் கட்சி பிளவுபடுத்தியது என்றால், இவர் எதற்காக, ‘பிற்படுத்தப்பட்டவர்’ பல்லவியை இத்தனை ஆண்டு காலம் பாடினாராம்?!

**மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சி நடக்கிறது. அங்கு தேர்தல் வரப்போகிறது. அதற்காக அங்கு சென்றுள்ளார் பிரதமர். மத்தியப்பிரதேசத்துக்கு எத்தகைய வளர்ச்சியைக் கொடுத்தது பா.ஜ.க. என்பதை சொல்லக் காணோம். ஆனால் ஆட்சியில் இல்லாத காங்கிரஸை விமர்சித்து இருக்கிறார். ‘இந்தியா’ கூட்டணி அவருக்கு எத்தகைய அச்சத்தைக் கொடுத்துள்ளது என்பதை அவரது பேச்சு வெளிப்படுத்தி இருக்கிறது.**

“வளர்ச்சிக்கு எதிரிகளாக இருப்பவர்களுக்கு மத்தியில் ஆட்சிபுரிய 60 ஆண்டுகள் கிடைத்தது. ஆனால் அவர்களால் நன்மைகளை வழங்க முடியவில்லை. அவர்கள் ஏழைகளின் உணர்வுகளுடன் விளையாடினர். ஜாதி அடிப்படையில் நாட்டில் பிளவை ஏற்படுத்தினர். அந்தப் பாவத்தை இப்போதும் அவர்கள் செய்து வருகின்றனர். ஆனால் கடந்த ஒன்பது ஆண்டுகளில் நாட்டில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. உலகமே இந்தியாவைப் புகழ்ந்து பாடுகிறது” என்று பேசி இருக்கிறார் பிரதமர்.

**ஒன்பது ஆண்டுகளாக இந்திய நாட்டின் வளர்ச்சி எந்தெந்தத் துறைகளில் நடந்துள்ளது என்பதை பட்டியலிட்டிருந்தால் பிரதமரைப் பாராட்டலாம். அந்தப் பட்டியலின் உண்மைத் தன்மையையாவது விமர்சிக்கலாம். அதை விட்டுவிட்டு, பொத்தாம் பொதுவாக வளர்த்துவிட்டேன் என்று சொல்வது பம்மாத்து தவிர வேறல்ல.**

‘உலகமே இந்தியாவைப் புகழ்ந்து பாடுகிறது’ என்பதும் அடுத்த கதையெப்படி தான். அப்படி எந்தப் பாட்டுக் கச்சேரியாவது எந்த நாட்டிலாவது நடந்திருக்கிறதா என்று தெரியவில்லை.

**கடந்த மார்ச் மாதம் அதானி குழுமத்தின் முறைகேடுகள் குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த ‘ஹிண்டன்பர்க்’ என்ற ஆய்வு நிறுவனம் அறிக்கை வெளியிட்டது. கார்ப்பரேட் வரலாற்றிலேயே நடந்திராத மிகப்பெரிய மோசடியை அதானி குழுமம் செய்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதைப் பற்றி இதுவரை வாய் திறக்கவில்லை பிரதமர். ROLL PKG Organized Crime and Corruption Reporting Project என்ற சர்வதேச பத்திரிகையாளர்கள் அமைப்பு அதானி குழுமம் குறித்து வெளியிட்ட ஆய்வறிக்கை குறித்து இங்கிலாந்தைச் சேர்ந்த பைனான்சியல் டைம்ஸ், தி கார்டியன் ஆகிய பத்திரிகைகள் சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. அதில், குஜராத்தின் முதலமைச்சராக நரேந்திர மோடி இருந்த காலத்தில் இருந்து கவுதம் அதானியுடன் தொடர்பு இருந்து வருவதை இந்தக் குழுமம் குற்றம் சாட்டியது.**

கடந்த 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரதமர் மோடி பிரான்ஸ் பயணம் மேற்கொண்டார். அப்போது பிரான்ஸ் நாட்டிடம் இருந்து ரபேல் வகையைச் சேர்ந்த 36 போர் விமானங்கள் வாங்கப்படும் என்று அறிவித்தார். இதைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு செப்டம்பரில் பிரான்ஸ் நாட்டின் டசால்ட் நிறுவனத்திடம் இருந்து 60 ஆயிரம் கோடி ரூபாய்க்கு 36 ரபேல் விமானங்களை வாங்க உடன்பாடு கையெழுத்தானது. இந்நிலையில் இந்த ஒப்பந்தத்தில் நடந்த ஊழல் குறித்து ‘மீடியா பார்ட்’ என்ற பிரெஞ்சு ஊடகம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டது.

**2002 - குஜராத் கலவரம் - அதன் மூலமாக நடந்த பச்சைப் படுகொலைகளை நினைவூட்டி பி.பி.சி. செய்தி நிறுவனம் ஒரு செய்திப்படம் தயாரித்து வெளியிட்டது. மணிப்பூர் கலவரம் குறித்து உலகப் பத்திரிகைகள் அனைத்தும் எழுதி விட்டன. இதெல்லாம் தான் ‘உலகமே இந்தியாவைப் புகழ்ந்து பாடுகிறது’ என்று பிரதமர் சொல்வதா?**

இத்தகைய போலிப் பெருமைகளைக் கட்டமைத்துக் கொள்ளும் பிரதமர், அவசியமற்ற வகையில் ‘ஜாதியவாதத்தை’க் கையில் எடுத்துள்ளார். இதுவரை அவர் கையில் இருந்தது மதவாதம். இப்போது ஜாதியவாதமும் அவர் கையில் இணைந்துள்ளது. சோஷியல் இன்ஜினியரிங்’ என்ற பெயரால் மக்களைப் பிளவுபடுத்தி ஜாதிப்பிணைப்பை இறுக்கமாக்கி ஜாதிக் கூட்டணிகளை உருவாக்க நினைக்கும் பா.ஜ.க. எதிர்க்கட்சிகளை ஜாதியை வைத்து பிளவுபடுத்துபவர்கள் என்று குற்றம் சாட்டுவது வேடிக்கை மட்டுமல்ல, அதன் வாடிக்கை.

மக்களைப் பிளவுபடுத்தும் பா.ஜ.க. அரசியலால்தான் மணிப்பூர் எரிந்து கொண்டு இருக்கிறது. ஐந்து மாதம் ஆகியும் அடக்க முடியவில்லை. ‘எரியட்டும், அணைந்து விடக் கூடாது’ என்றே பா.ஜ.க. நினைப்பது போலத் தெரிகிறது. ஐந்து மாதம் ஆனபிறகும் அந்த மாநிலத்துக்குப் போக மாட்டேன் என்பதில் ‘உறுதியாக’ இருக்கிறார் பிரதமர்.

மக்களைப் பிளவுபடுத்த கர்நாடக பா.ஜ.க. அரசு, இடஒதுக்கீட்டில் கை வைத்தது. இதனால் அந்த மாநிலத்திலும் கலவரம் ஏற்பட்டது. அதை உணர்ந்த கர்நாடக மக்கள், பா.ஜ.க.வுக்கு தோல்வியைக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினார்கள்.

**குடியுரிமைச் சட்டம் - பொதுசிவில் சட்டம் ஆகியவை பா.ஜ.க.வின் பிளவுவாத அரசியலின் சட்டப்பூர்வ வடிவங்கள் ஆகும். பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்ற கண்துடைப்பு நாடகத்தில் கூட, இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்காததும் பா.ஜ.க.வின் ஜாதியவாதமே. இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்துப் பெண்கள், அரசியல் அதிகாரம் பெற்றவர்களாக மாறி விடக் கூடாது என்பதற்காகவே இந்த உள்ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. ‘பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்தவன்’ என்று சொல்லிக் கொள்பவர் நடத்திய நாடகம் இது. அல்லது இவரை முன்னிறுத்தி ஆதிக்க வர்க்கம் நடத்திக் காட்டிய நாடகம் இது. பெண்ணினத்துக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய துரோகம்தான், இந்த சட்டம் ஆகும். இதை மறைப்பதற்காக ‘ஜாதியால் பிளவுபடுத்துகிறார்கள்’ என்கிறார் பிரதமர்.**

ஜாதிப் பிரிவினைகளே 60 ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ் கட்சி தான் உற்பத்தி செய்தது போல பிரதமர் பேசுகிறார். பிரிட்டிஷ்காரர்கள் தான் ஜாதியை உருவாக்கினார்கள் என்பதைப் போல இங்கேயுள்ள ஒரு ஆளுநர் பேசிக் கொண்டு வருகிறார். இருவருமே தவறான வரலாற்றை - மேலும் தவறாகப் பேசுகிறார்கள். தவறான உள்நோக்கத்துடன் பேசுகிறார்கள். தங்களது கடந்த காலத் தவறுகளை மறைப்பதற்காகவே பேசுகிறார்கள்.

## நெல்லை, தென்காசியில் அணைகளுக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரிப்பு!

நெல்லை, அக்.5-

நெல்லை மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்ததன் விளைவாக பிரதான அணையான 142 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணை நீர்மட்டம் கடந்த 3 நாட்களில் 19 அடி உயர்ந்த நிலையில், நேற்று மேலும் 2 அடி உயர்ந்து 94.40 அடியை எட்டியுள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 106.17 அடியாக உள்ளது.

இந்த 2 அணைகளுக்கும் வினாடிக்கு 1,909 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணைகளில் இருந்து வினாடிக்கு 1354 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. 118 அடி கொண்ட மணிமுத்தாறு அணை நீர் மட்டம் மேலும் 1 அடி உயர்ந்து நேற்று காலை நிலவரப்படி 51.60 அடியாக உள்ளது. அணைக்கு 340 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

கொடுமுடியாறு அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 28 அடியாக இருந்த நிலையில் நேற்று மேலும் 3 அடி உயர்ந்து 31.25 அடியை எட்டியுள்ளது. அந்த அணை பகுதியில் அதிகபட்சமாக 7 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில் மூலக்கரைப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. அங்கு அதிகபட்சமாக 22 மில்லிமீட்டரும், ராதாபுரத்தில் 3.60 மில்லிமீட்டரும் மழை பெய்தது. களக்காட்டில் 1.20 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது. மாஞ்சோலை, காக்காச்சி மற்றும் ஊத்து எஸ்டேட்டுகளில் விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. அங்கு தலா 2 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

தென்காசி மாவட்டத்தில் குண்டாறு அணை பகுதியில் நேற்று முன்தினமும் பரவலாக மழை பெய்தது. அந்த அணை முழு கொள்ளளவான 36 அடியை எட்டி 2 வாரங்களுக்கும் மேலாக உபரிநீர் வெளியேறி வருகிறது. அணையில் இருந்து வினாடிக்கு 98 கனஅடி நீர் உபரியாக வெளியேற்றப்படுகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நிறைவுரையாற்றினார். இம்மாநாட்டில், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அரசுத் துறைச் செயலாளர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டம் - மாநகரத்தை பாதுகாப்பானதாகவும் அமைதியாகவும் பாதுகாத்து

# நமது அரசுக்கு நற்பெயர் ஈட்டித் தாருங்கள்!

### மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் - காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவுரை!

**சென்னை, அக்.5-**

**சென்னை-தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில், நேற்று முன்தினம் (3.10.2023) நடைபெற்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நிறைவுரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “மாவட்டம், மாநகரத்தை பாதுகாப்பானதாகவும், அமைதியாகவும் பாதுகாத்து, நமது அரசுக்கு நற்பெயர் ஈட்டித் தாருங்கள்!” என்று வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைமையில் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய நிறைவுரை வருமாறு:-

காலை முதல் பல்வேறு கருத்துக்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசப்பட்டிருக்கிறது. இவை அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு அனைவரும் செயல்பட வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு அரசாங்கத்தின் மிக முக்கியமான கடமையும் சாதனையும் - சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதுதான். அமைதியான மாநிலத்தில் தான் அனைத்துத் துறைகளும் வளரும். நான் அடிக்கடி வலியுறுத்துவது - குற்றங்களைக் குறைத்துவிட்டோம் என்பதாக அல்லாமல், குற்றம் நடைபெறாமல் தடுத்துவிட்டோம் என்பதாக தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

**நம்பிக்கையைக் காப்பாற்றுவதே நல்ல அரசின் அடையாளம்!**

பாதிக்கப்பட்டவர்கள் பக்கமாக, எளியோர் பக்கமாக காவல் துறை இருக்க வேண்டும். இந்த அரசு நலிந்தோர், வறியோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் நாடக்கூடிய அரசாகும். ஒரு சாமானியர் தன்னுடைய விண்ணப்பம், புகார் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் காவல் நிலையத்தை நாடுகின்றார் என்றால், அந்த நம்பிக்கையினைக் காப்பாற்றுவதுதான் ஒரு நல்ல ஆட்சியின் அடையாளம்.

ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் புகார் கொடுக்க வரும் மனுதாரர்களைக் கனிவுடன் நடத்துவதற்கும், அவர்களுக்கு வழிகாட்டவும் வரவேற்பாளர் பணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வரவேற்பாளர்களை, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியை மட்டுமே செய்யச் சொல்ல வேண்டும். இவர்களை மற்ற பணிகளுக்காகப் பயன்படுத்துவதாக எனக்குத் தெரிய வருகிறது. அது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். பெறப்படும் அனைத்து விண்ணப்பங்களும், புகார்களும் இணையதளத்தில் பதிவுசெய்யப்பட்டு, அதற்கான ஒப்புகைச் சீட்டு மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அனைத்து காவல்துறை ஆணையர்களும், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்களும் ஒவ்வொரு புதன்கிழமையன்றும் குறை கேட்கும் கூட்டம் நடத்த வேண்டும் என்று கடந்த ஆண்டு நான் ஆணையிட்டேன். அன்றைய தினம் நீங்கள் மனுதாரர்களிடம் இருந்து நேரடியாக மனுக்களைப் பெற வேண்டும்.

**பிரச்சினையை முழுமையாக அறிந்து முற்றுப்புள்ளி வைத்திடுவீர்!**

ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து அதிக மனுக்களோ அல்லது திரும்பத் திரும்ப ஒரே பொருள் குறித்து தொடர்ந்து மனுக்களோ வரும் நிலையில் அந்தக் காவல் நிலையங்களுக்கு நீங்களே நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும். காரணத்தைக் கண்டறிந்து அதனுடைய பிரச்சினையைப் புரிந்து, அதனை முழுமையாகத் தடுத்து, முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அரசு வழக்கறிஞர்கள், அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள், உதவி இயக்குநர்/இணை இயக்குநர், குற்ற வழக்குகள் தொடர்வுத் துறை உள்ளிட்ட சட்ட அலுவலர்களுடன் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்ய வேண்டும். ஃபோக்சோ வழக்குகளில் தடய அறிவியல் துறையின் ஆய்வறிக்கை மிக முக்கிய ஆதாரம் என்பதால் அதனை விரைந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல்துறைத் துணைத் தலைவர்கள் (DIG) மாதத்திற்கு ஒரு முறையும், மண்டல காவல்துறைத் தலைவர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையும் அனைத்து வழக்குகளின் நிலை குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும்.

நிலுவையில் உள்ள அனைத்து பிடியாணைகளையும் நிறைவேற்றி சட்டம் ஒழுங்கிற்குக் குந்தகம் விளைவிப்போரைக் கைது செய்து, தேவைப்பட்டால், பொது அமைதியை நிலைநாட்ட குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை பெற்றுத் தந்தால் மட்டுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் மீது ஒரு நம்பிக்கை ஏற்படும். ஆகையால், காவல்துறை ஆணையர் / மாவட்டக் கண்காணிப்பாளர்கள் இதனை மாதந்தோறும் ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

நிலுவையில் உள்ள அனைத்து மனுக்கள், விசாரணை அதனுடைய இனங்கள், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டிய இனங்கள் ஆகியவற்றை காவல் நிலையங்களுக்கே சென்று ஆய்வு செய்வதோடு, அதன் தொடர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் பெரிய அளவில் அசம்பாவிதச் சம்பவங்கள் ஏதுமின்றி சட்டம் ஒழுங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

சாதிமத பூசல்கள் சிறிய அளவில் ஏற்படும் நிலையிலேயே கண்டறியப்பட்டு, முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

சட்டம் - ஒழுங்கு மற்றும் சாதி உணர்வுகளைத் தூண்டக்கூடிய பிரச்சினைகளில் கவனமுடன், மாவட்ட நிர்வாகத்திற்குக் கீழான அனைத்துத் துறைகளுடனும் ஒருங்கிணைந்து சுமூகமான முறையில் தீர்வு காண வேண்டும்.

**சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட உரிய நடவடிக்கை!**

அடுத்து வரும் ஏழு, எட்டு மாதங்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டிய காலம். நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் காவலர் முதல் காவல்துறை உயரதிகாரிகள் வரை மிக எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும்.

சமூக ஊடகங்களின் நிகழ்வுகளையும் கண்காணித்து வரவேண்டும்.

அமைதி மற்றும் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இன்று விவாதிக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் அளவுகோல்களின் அடிப்படையில் நீங்கள் ஒவ்வொருவரும், தங்கள் பொறுப்பினை உணர்ந்து, உங்களுடைய மாவட்டத்திற்குச் சிறந்த தலைமையாகச் செயல்படுவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தங்கள் மாவட்டம் / மாநகரத்தைப் பாதுகாப்பானதாகவும், அமைதியானதாகவும் பாதுகாத்து நமது அரசிற்கு நற்பெயரை ஈட்டித் தாருங்கள் என்று கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## புதுக்கோட்டையில் கிராம சபைக் கூட்டம்!

புதுக்கோட்டை, அக்.5-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 02.10.2023 அன்று கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஐ.சா. மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. நா.கவிதப்பிரியா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, முனசந்தை ஊராட்சி மன்றத் தலைவர் சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் “சட்டமன்ற நாயகர் கலைஞர்” விழா குழு சார்பில் தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதி சுப்பிரமணியபுரத்தில் உள்ள வியாசா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முன்னாள் சட்டப்பேரவை தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் சட்டப்பேரவைச் செயலாளர் மா.செல்வராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கல்லூரி மாணவிகள் கு.காவிய பிரியா, க.சூரிய கலா, மு.சாஜிதா, ம.செ.அமல்சாதிய்யா க.ம.ஜஹ்ரா ஆகிய 5 மாணவிகள் பங்கேற்று கலைஞர் அவர்களின் சாதனைகளைப் பற்றி பேசி சான்றிதழ் மற்றும் பரிசுகளை பெற்றனர். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜா,சதன் திருமலை குமார், சட்டப்பேரவை இணைச் செயலாளர் சாந்தி, துணை செயலாளர் நாகராஜன் மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி,நெல்லை மண்டல தலைவர் வெள்ளத்துரை பாண்டியன், நிர்வாக இயக்குனர் வெள்ளத்தாய், முதல்வர் ஈஸ்வரன் உள்பட பேராசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 5-**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் தெரிவித்து நிதியுதவியும் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டம், ஆற்றூர் கிராமம், தோப்புவிளையில் வசித்துவரும் டெம்போ ஓட்டுநர் சோம்ராஜ் என்பவரது மனைவி திருமதி.சித்ரா (வயது 47), மகள் திருமதி.ஆதிரா (வயது 23) மற்றும் மகன் செல்வன். அஸ்வின் (வயது 19) ஆகிய மூவரும் நேற்று (3.10.2023) அவர்களது வீட்டில் எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

தனது குடும்பத்தினரை இழந்து வாடும் சோம்ராஜ் மற்றும் அவரது உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# புதுக்கோட்டையை மாநகராட்சியாக அறிவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்!

## அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!



புதுக்கோட்டை, அக்.5-

புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூரில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், குடிநீர் அபிவிருத்திதிட்டத்தின்கீழ், ரூ .75.06 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளை, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தலைமையில் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் கே.என்.நேரு, புதுக்கோட்டையில் காவிரி கூட்டுக் குடிநீர் குழாய்களில் பழுது ஏற்பட்டுள்ளதால் முறையாக குடிநீர் வழங்க முடியவில்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட 10 எம் எல் டி தண்ணீர் மட்டுமே கொடுக்கப்பட்டு வருகிறது. குழாய்கள் சீரமைக்கப்பட்டால் 16 எம்எல்டி தண்ணீர் வழங்கப்படும். இதற்காகத்தான் தற்போது ரூ.75.06 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் குடிநீர் வழங்குவதற்கான திட்டம் ரூ2,195 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது. பாதாள சாக்கடை திட்டத்தில் சென்னை போன்ற முக்கிய நகரங்களில் இயந்திரங்கள் மூலம் கழிவுகள் அகற்றும் நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. சில தனிப்பட்ட நபர்கள் நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்காமல் கழிவுகளை அகற்ற முற்படும்போது எதிர்பாராதவிதமான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. பாதாள சாக்கடைகளை அகற்ற தேவையான இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உயிரிழப்புகளை தடுக்க அரசு முழு முயற்சி மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பாக பொது மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு சிலர் செய்யும் தவறால் அரசுக்கு தேவை இல்லாமல் கெட்ட பெயர் ஏற்படுகிறது. தூய்மை பணியாளர்களாக பணியாற்றி வரும் ஒப்பந்த பணியாளர்களுக்கு ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட தேதிக்குள் ஊதியம் வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நடக்கும் தவறுகளை திருத்திக் கொண்டுதான் உள்ளோம் என கூறினார். புதுக்கோட்டையை மாநகராட்சியாக அறிவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். நிதி வருவாயை கருத்தில் கொண்டு மன்னர் நகரம் என்பதாலும் விரைவில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## சமூக ஊடகங்களை கண்காணித்து

# பொய் செய்தி பரப்புவோர் மீது நடவடிக்கை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வர் எச்சரிக்கையை சுட்டிக்காட்டியுள்ளது!

சென்னை, அக். 5 -

சமூக ஊடகங்களை கண்காணித்து பொய் செய்தி பரப்புவோர் குறித்து முதல்வர் அவர்கள் எச்சரிக்கை விடுத்ததை 'தினகரன்' நாளேட்டின் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.



தினகரன்

அக்டோபர் 4, 2023 புதன்கிழமை

முதல்வர் எச்சரிக்கை

பிரதமர் மோடி நினைத்தால் நாடாளுமன்ற தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம். இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள 5 மாநில தேர்தலுடன் கூட நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படலாம். அதற்கு ஏற்றாற்போல் அனைத்து முன்னேற்பாடுகளையும் தேர்தல் ஆணையமும் செய்து வருகிறது. இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் அரசியல் களம் முற்றிலும் ஒரு மாறுபட்ட கோணத்தில் மாறிப்போய் நிற்கிறது. ஜெயலலிதா மறைவிற்கு பிறகு சிதறுண்ட நிலையில் இருக்கும் அதிமுகவில், எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான கூட்டணியில் இருந்து பா.ஜ வெளியேற்றப் பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் பா.ஜ மிகப்பெரிய சக்தியாக வளர்ந்து விட்டது என்ற மனநிலையில் அந்த ...

இதுகுறித்து தினகரனின் நேற்றைய (4.10.2023) தலையங்கம் வருமாறு :-

மோடி நினைத்தால் நாடாளுமன்ற தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம். இந்த ஆண்டு இறுதியில் நடைபெற உள்ள 5 மாநில தேர்தலுடன் கூட நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படலாம். அதற்கு ஏற்றாற்போல் அனைத்து முன்னேற்பாடுகளையும் தேர்தல் ஆணையமும் செய்து வருகிறது. இந்த நேரத்தில் தமிழ்நாட்டில் அரசியல் களம் முற்றிலும் ஒரு மாறுபட்ட கோணத்தில் மாறிப்போய் நிற்கிறது. ஜெயலலிதா மறைவிற்கு பிறகு சிதறுண்ட நிலையில் இருக்கும் அ.தி.மு.க.வில், எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான கூட்டணியில் இருந்து பா.ஜ.க. வெளியேற்றப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் பா.ஜ. மிகப்பெரிய சக்தியாக வளர்ந்து விட்டது என்ற மனநிலையில் அந்த கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை செயல்பட்டுவந்ததன் விளைவு இந்த வெளியேற்றம். நாடாளுமன்ற தேர்தலை அருகில் வைத்துக்கொண்டு, அதுவும் பா.ஜ.க.வுக்கு முக்கியமான தேர்தல் நேரத்தில் இப்படி கூட்டணியில் இருந்து வெளியேற்றப்படுவது நிச்சயம் கையறு நிலைதான். ஆனால் பா.ஜ.க.வை வெளியேற்றிய பிறகு எடப்பாடி தலைமையிலான அ.தி.மு.க. மிகவும் உற்சாகமாக உள்ளது. அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற முறையில் நான் எடுத்த முடிவு அல்ல இது.

ஒட்டுமொத்த தொண்டர்கள் எடுத்த முடிவு. 2 கோடி தொண்டர்களின் உணர்வுகளின் பிரதிபலிப்புதான் பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகுவதாக எடுத்த தீர்மானம். பா.ஜ.க. கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது என்று தெள்ளத்தெளிவாக சொல்லி விட்டார் எடப்பாடி. இப்போது பா.ஜ.க. தருணம். அண்ணாமலையை நீக்குவதா, இல்லை அதிமுக நிலையை ஏற்றுக் கொண்டு, ஒன்றியத்தில் உள்ள ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி சிறிய கட்சிகளை இணைத்து பா.ஜ.க. தலைமையில் நாடாளுமன்ற தேர்தலை சந்திப்பதா என்றெல்லாம் அங்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இன்னும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு இருக்கிறோம் என்கிறார் பா.ஜ.க. மாநில துணைத்தலைவர் வி.பி. துரைசாமி. தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன், புதிய தமிழகம் கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் இரண்டு கட்சிகளும் இணையாதா, இனி அவ்வளவு தானா என்ற ஏக்கத்தில் காத்திருக்கிறார்கள். இந்த நேரத்தை பயன்படுத்தி பா.ஜ.க.வுடன் நெருங்கி அரசியல் ஆதாயம் பெற முடியுமா என்று சசிகலா, டிடிவி தினகரன், ஓ.பி.எஸ். அணியினரும் காத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பரபரப்பான நிலையில் மாவட்ட கலெக்டர்கள், எஸ்.பி.க்கள் பங்கேற்ற 2 நாள் போலீஸ் மாநாடு சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தொடங்கி உள்ளது.

இந்த கூட்டத்தில் தற்போதைய அரசியல் சூழலில் சமூக ஊடகங்கள் பற்றிய எச்சரிக்கையை முதல்வர் தெரிவித்துள்ளார். உண்மைக்கு புறம்பான செய்திகளை பரப்புவதில் சமூக ஊடகங்களின் தாக்கம் அதிகம் உள்ளதால், கலெக்டர்கள், எஸ்பிக்கள் தொடர்ந்து சமூக ஊடகங்களை கண்காணித்து பொய் செய்தி பரப்புவோர், சமூக ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிப்போர் மீது உரிய நடவடிக்கை எடுப்பது மட்டுமல்லாமல் அதுபற்றி சமூக ஊடகங்களில் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தி இருக்கிறார். நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வந்துவிட்ட வேளையில், தமிழ்நாட்டின் அரசியல் சூழல் அடியோடு மாறிவிட்ட நிலையில், ஒவ்வொரு மாவட்டத்தையும் நிர்வகித்து வரும் கலெக்டர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களுக்கு நிச்சயம் இந்த அறிவுரை கைகொடுக்கும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 02.10.2023 அன்று கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. நா.கவிதப்பிரியா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, முனசந்தை ஊராட்சி மன்றத் தலைவர் சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 02.10.2023 திங்கள்கிழமை சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

## செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால்

# லட்சக்கணக்கானோர் வேலை இழக்கும் அபாயம்!

## உருகுவே -சர்வதேச கருத்தரங்கில் பி.வில்சன் எம்.பி. உரை!



சென்னை, அக் 5-

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் லட்சக் கணக்கானோர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பி.வில்சன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

உருகுவேயில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் கலந்துகொண்டு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்து விரிவாக உரையாற்றினார்.

அவரது உரை வருமாறு:-

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அதிவேக வளர்ச்சி மற்றும் அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறி வருகிறது.

செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகள் கிட்டத்தட்ட இன்று எல்லா துறைகளிலும் காணப்படுகின்றன. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் புதிய வாய்ப்புகள் உருவாகும் அதே வேளையில், அதன் பயன்படுத்தும்போது ஏற்படும் அபாயங்களைப்புரிந்து கொள்வதற்கும், அவற்றை நிர்வகிப்பதும் பெரும் சவாலாக உள்ளது.

தொழில்நுட்பத்தில் முன்னேறுவதற்கான போட்டியில் நாம் ஈடுபடுவதால், பாதுகாப்புகளில் நம்முடைய சுவனம் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளது. அணு ஆயுத பயன்பாட்டைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் ஒப்பந்தங்களைப் போலவே, செயற்கை நுண்ணறிவுக்கும் ஒப்பந்தங்கள் வேண்டும் என கோரிக்கை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிபுணர்களிடமிருந்தே எழுந்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு அமைப்புகளின் விளைவுகள் நேர்மறையாகவும், அவற்றின் அபாயங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் இருந்தால் மட்டுமே. அவற்றின் உருவாக்கத்திற்கு நாடாளுமன்றங்கள் ஒப்புதல் தரவேண்டும். செயற்கை நுண்ணறிவு நமக்கு முன்வைக்கும் ஒரு முக்கியமான சவால், இது வேலையின்மைக்கு வழிவகுக்கும். மேலும் லட்சக்கணக்கான ஊழியர்கள் வேலையை இழக்க நேரிடும். எனவே, நாம் கட்டமைக்கும் ஒழுங்குமுறைகள், வேலைவாய்ப்பை பாதுகாப்பதை உறுதி செய்ய வேண்டும். தேவைப்படும் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான எந்தவொரு சட்டத்தையும் இயற்றும் முன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு வரைவுச் சட்டத்தை உருவாக்கி, பொது மக்கள், துறை வல்லுநர்கள், தொழில் துறையினர், மனித உரிமை அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், குழந்தைகள் உரிமை அமைப்புகள் என பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை செய்யவேண்டும்.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. தெரிவித்தார்.

## கழகத் தலைவரின் ஆலோசனைக்கேற்ப - வருகிற

# நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாகை சூட உறுதியேற்போம்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு வேண்டுகோள்!

சென்னை, அக்.5 -

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 02.10.2023 திங்கள்கிழமை சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சரு மான பி.கே. சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: ப.ரங்கநாதன், கே. எஸ்.ரவிச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்கள் பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, நாதன், எம்.விஜயகுமார் மற்றும் பரிதிஇளம்சுருதி, எம்.பி.எம்.ஷேக்அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள் தேவஜவஹர், இசட் ஆசாத், ஜி. மகாதேவன், புனிதவதி எத்திராஜன், பகுதிச் செயலாளர்கள் செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், எ. நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், சொ.வேலு, வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி,

தேர்தல் பொறுப்பாளர்கள்: பி.டி.சி.செல்வராஜ், கௌதமன், இரா.விடுதலை, ஓ.ஏ.நாகலிங்கம், கா.பிரபு, பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், பி.உதயசங்கர், வி. ரமேஷ் (எ) நீலகண்டன், ஆர்.கலைச் செல்வி, ஏ.பி. பூர்ணிமா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: டி. லோகேஷ், பாலமுருகன், ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர்.தனசேகர், ஆர்.டி. சங்கர்நானா, எல். பி.எப். மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி. விஜய்குமார், துரைக்கண்ணன், மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, ராஜா முகம்மது, பிரதீப்குமார், து. ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர். ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். மா.ருத்ர மூர்த்தி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**தீர்மானம்: 1**

உலகின் தலைசிறந்த பத்திரிகைகளில் ஒன்றாக கருதப்படும் 'தி எக்னாமிஸ்ட்' என்ற பத்திரிகை 'மீட் தி திராவிடியன் ஸ்டாலின்' என்ற கட்டுரையில் தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநிலத்தின் முதல்வராக பொறுப்பேற்றவுடன் இம்மாநிலத்தின் வளர்ச்சிக்காக நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டஃப்லோ, ரகுராம் ராஜன் உள்ளிட்ட ஐந்து பொருளாதார அறிஞர்கள் கொண்ட பொருளாதார ஆலோசனை குழு அமைத்து இம்மாநிலத்தின் துரித வளர்ச்சிக்கு வித்திட்டதும், கொரோனா தொற்று காலத்தில் அமைக்கப்பட்ட சட்ட மன்ற கட்சி பிரதிநிதி களின் குழுவில் முந்தைய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரையும் இடம்பெறச் செய்து பணியாற்றியதும், இப்படி ஒவ்வொரு சிக்கல்களிலும் கவர்ச்சி அரசியலை தவிர்த்து பட்டறிவின் அடிப்படையில் அணுகுகின்ற முதல்வராக திகழ்பவர் இவர். இது இந்தியா இதுவரை கண்டிராதது. அதனால் தான் இவர் 2024 நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் முன்னிறுத்தப் படுவதில் தனிக் கவனம் பெற்றிருக்கிறார் என புகழாரம் சூட்டிய பத்திரிக்கைக்கு நன்றியையும், இப்புகழுக்கு சொந்தக்காரராக திகழ்கின்ற நம் கழக தலைவரை வாழ்த்தியும் இக்கூட்டம் தீர்மானம் நிறை வேற்றியது.

**தீர்மானம்: 2**

திராவிட முன்னேற்றக் கழக மூத்த முன்னோடிகளில் ஒருவரும் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் இயக்கத்தின் சிங்கம் கழகத்தின் கருவூலம் தந்தை பெரியாரின் மாணவர் தன்மான பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத்தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற தோழர் கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில், சட்டப்பேரவை உறுப்பினராகவும், பின்னர் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகக் கொள்கையினை நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலித்தவர் பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலேதான் வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட "வாலிபப் பெரியார்" என்று கழக நிர்வாகிகள் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்ட "ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் வாய்ப்பினை சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு வழங்கிய கழகத்தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் ப டுகிறது

**தீர்மானம்:3**

01.10.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணி அளவில் காணொலி மூலம் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் கழகத் தலைவர் வழங்கிய ஆலோசனைக்கேற்ப பணிகளை வகுத்து, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாகை சூட உறுதியேற்றும்,

14.10.23 சனிக்கிழமையன்று முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, கழக மகளிர் அணி முன்னெடுக்கும், மகளிர் உரிமை மாநாட்டில் திரளாக பங்கேற்க முடிவெடுத்தும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## முதலமைச்சர் - அமைச்சர் உதயநிதி குறித்து அவதூறாகப் பேசிய

# அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

சென்னை, அக். 5 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர் உதயநிதி குறித்து அவதூறாக பேசிய முன்னாள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் குமரகுரு, பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டி நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 19ம் தேதி கள்ளக்குறிச்சியில் மந்தைவெளி என்ற இடத்தில் நடைபெற்ற அண்ணா நூற்றாண்டு பொதுக்கூட்டத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர் உதயநிதி ஆகியோரை அவதூறாக பேசியதாக, உளுந்தூர்ப்பேட்டை அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குமரகுரு மீது காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர்.

கள்ளக்குறிச்சி தி.மு.க. தெற்கு பகுதி செயலாளர் வெங்கடாசலம் அளித்த புகாரின் அடிப்படையில், பல்வேறு பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில், அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குமரகுரு, முன்ஜாமீன் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு, நீதிபதி ஜெயச்சந்திரன் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, காவல்துறை தரப்பில் அவருக்கு முன் ஜாமீன் வழங்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இருதரப்பு வாதத்தையும் கேட்ட நீதிபதி, அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குமரகுரு, காவல்துறையின் அனுமதி பெற்று பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டி நிபந்தனையற்ற மன்னிப்பு கோர வேண்டும் என்று உத்தரவிட்டார். இது தொடர்பாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில், தமிழ்நாடு வனத்துறை வரலாற்றில் முதன்முறையாக சிறப்பாக பணியாற்றிய மாவட்ட வன அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கும் வகையில், 2022–23ஆம் ஆண்டுக்கான வளங்குன்றா வனமேலாண்மை நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டதற்கான விருதினை திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் எஸ்.ஆனந்த், மனித வன உயிரின மோதல்கள் மேலாண்மை நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டதற்கான விருதினை இராமநாதபுரம் வன உயிரின காப்பாளர் பாகன் ஜெக்தீஸ் சுதாகர், வன உரிமைச்சட்ட நடவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொண்டதற்கான விருதினை கன்னியாகுமரி வன உயிரின காப்பாளர் எம்.இளையராஜா ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.10.2023) தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில், தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக சிறப்பான முறையில் பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்களை சிறப்பிக்கும் வகையில் 2022ஆம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர்.வி.சஜீவனா, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பி.என்.ஸ்ரீதர், ஆகியோருக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். உடன் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு ஆகியோர் உள்ளனர்.

ஒன்றிய அரசின் புதிய மருத்துவக் கல்லூரி கொள்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

# முதல்வரின் மருத்துவ திட்டங்களுக்குப் பாராட்டு!

## தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக மருத்துவ அணி தீர்மானம்!

கரூர், அக். 5 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மருத்துவ திட்டங்களுக்கு தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் பாராட்டு தெரிவித்துள்ளது. மசோதாவை கிடப்பில் போட்டுள்ள எதேச்சாதிகாரத்தை கண்டித்து கவர்னர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மருத்துவ சேவை அணி மாநில செயற்குழு கூட்டம் கரூர் பசுபதி பாளையத்தில் நடைபெற்றது. இதன் தலைவர் பேராசிரியர் முனைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். கரூர் மாவட்ட தலைவர் சாகுல் ஹமீது வரவேற்று பேசினார். மாநில பொதுச்செயலாளர் ஹாஜா கனி, அப்துல் சமது (எம்.எல்.ஏ), சபியுல்லாஹ் கான், கோவை உமர், சம்சுதீன், முஸ்தபா, பாரூக் அப்துல்லா, ஜிஃப்ரி காசிம், நூர்தீன், அப்துல் ரஹீம், மருத்துவ சேவை அணி நிர்வாகிகள் கலீல் ரகுமான், அப்துல் ரபி, கதிர், பதேகான், பௌஜுல் ஹசன், ஜாகிர் உசேன், ரசூல் மைதீன், ஷேக் அமானுல்லா, பத்ருதீன், சையது அபுதாஹிர், அன்சாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும், தாய் சேய் பரிசு பெட்டகத் திட்டம் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேர திட்டம், 108 அவசர ஊர்தி சேவை, 104 மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம், 102 இலவச தாய் சேய் நல ஊர்தி திட்டம், 155377 இலவச அமரர் ஊர்தி சேவை திட்டம் போன்ற புதிய மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்களை வரவேற்பது, இதற்காக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது.

மேற்கண்ட திட்டங்களின் பயன்கள் தனியார் மருத்துவமனைகளிலும் செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

அண்ணா பிறந்தநாளில் சிறைகளில் சுமார் 20 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருவோரை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். இதனை ஏற்று தமிழ்நாடு அரசு 49 நீண்ட கால சிறைவாசிகளை விடுதலை செய்ய ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. ஆனால் ஏறத்தாழ ஒரு மாதம் ஆகியும் ஆளுநர் இருந்த கோப்புக்கு ஒப்புதல் தராமல் காலம் கடத்தி வருகிறார். ஆளுநரின் இந்த எதேச்சதிகார நடவடிக்கையைக் கண்டித்து சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையை வரும் அக்டோபர் 26 ஆம் தேதி முற்றுகையிட உள்ளோம்.

எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் ஆளுநரை பயன்படுத்தி அம்மாநில ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மத்திய அரசை வன்மையாக கண்டிக்கிறோம். பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியேறியது வரவேற்கத்தக்கது. என்றாலும் எத்தனை நாட்களுக்கு இது நீடிக்கும் என்பது கேள்விக்குறியே. மேலும் இஸ்லாமியர்களுக்கு எதிரான குடியுரிமை திருத்த சட்டம் உள்ளிட்ட பல சட்டங்களை அ.தி.மு.க.வின் வாக்குகளை பெற்றுத்தான் ஒன்றிய அரசு சட்டமாக நிறைவேற்றி உள்ளது. அ.தி.மு.க. கொள்கை என்ன என்பது புரியாத புதிராக இருக்கிறது. பா.ஜ.க. கூட்டணியில் இருந்து ஒவ்வொரு கட்சியாக வெளியேறி வருவது தேசிய ஜனநாயக கூட்டணி வலுவிழந்து வருகிறது என்பதை காட்டுகிறது என்றார்.



அண்ணல் காந்தியடிகள் 155 வது பிறந்த நாளை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம் பொட்டகவையல் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்து அனைத்துக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என பொதுமக்களிடம் கூறினார். நிகழ்ச்சியில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, இராமநாதபுரம் வருவாய் அலுவலர் கோவிந்தராஜுலு, வட்டார வளர்ச்சி அலுவலர் திருநாவுக்கரசு மற்றும் பரமக்குடி வட்டாட்சியர் ரவி, நைனார்கோவில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் அண்ணாமலை, துணைச் செயலாளர் திலகர், ஊராட்சி மன்றத் தலைவர் ஹக்கீம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

பீகார் மாநில சாதிவாரிக் கணக்கெடுப்பு, பிற்படுத்தப்பட்ட மக்களை விழிப்படையச் செய்துள்ளது!

# ஒன்றிய அரசு சாதிவாரியான கணக்கெடுப்பை நடத்தி சமூகநீதியை நிலைநாட்ட வேண்டும்!

## விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, அக்.5-

விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித்தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



பீகார் மாநிலத்தில் பல்வேறு தடைகள் மற்றும் முட்டுக்கட்டைகளைக் கடந்து சாதிவாரிக் கணக்கெடுப்புகள் எடுக்கப்பட்டு தற்போது அதன் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் ஒவ்வொரு சமூகத்தின் எண்ணிக்கை மற்றும் அரசில் அவருடைய பங்கு போன்றவை வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இது தேசிய அளவில் சாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது. இந்த மகத்தானப் பணியினை மேற்கொண்ட பீகார் அரசுக்கும், அம்மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த கணக்கெடுப்பில் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 63 சதவிகிதம் என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையும் சேர்த்தால் ஏறத்தாழ 83 விழுக்காடு அடித்தட்டு மக்களாக உள்ளனர் என்பது தெளிவாகிறது. இவர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு இருக்கிற சமூக நீதி, பொருளாதார முன்னேற்றத்திற்கு சமூக நிலையில் சமன்பாட்டிற்கு அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், அதன் மூலம் இந்த மக்கள் அடைந்திருக்கிற முன்னேற்றம் போன்றவற்றை துல்லியமாக அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல இந்தியாவின் மக்கள் தொகை எப்படி இருக்கும் என்பதற்கான அளவுகோலாக பீகார் மாநில சாதி வாரி கணக்கெடுப்பு விவரம் அமைந்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று 83 விழுக்காடாக உள்ள இந்த மக்களுக்கு மத்திய அரசிலுள்ள மிக முக்கிய அரசு செயலாளர்கள் பதவியில் 90 இல் மூன்று மட்டுமே இந்த சமூகத்திற்கு கிடைத்திருக்கிறது என்றும், ஒட்டுமொத்தமாக இந்த சமூகத்திற்கு நிதி நிலையில் 5 விழுக்காடு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்ற செய்தி பெரும்பாலான மக்களை சிந்திக்க வைத்திருக்கிறது. இதன் மூலம் நீதி மறுக்கப்பட்ட மக்களுக்கு அந்த சமூக நீதியை அடைவதற்கான ஒரு சிந்தனைக் களமும் அதற்கான தொடர் முயற்சியும் ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பும் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

2009-14 காலகட்ட காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியின் போது எடுக்கப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பை மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி இன்று வரை வெளியிடவில்லை. இது பெருவாரியாக உள்ள இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மோடி அரசு செய்யும் மிகப் பெரிய துரோகமாகும். அது மட்டுமின்றி பீகார் மாநில சாதிவாரி கணக்கெடுப்பு வெளியான பிறகு ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் சாதி வாரியாக மக்களை கூறு போடுகிறார்கள் என்று கூறுவது குதிரை கீழே தள்ளியது மட்டுமின்றி குழியையும் பறித்த கதையாக உள்ளது. மோடி அவர்கள் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அவர் மேட்டுக்குடியின் குரலாக அவர்களின் ஏவலாளியாக தான் இருந்து செயல்பட்டு வருகிறார்.

பாரதிய ஜனதா கட்சியும் அதன் பின்னால் இருந்து செயல்படும் அமைப்புகளும் பிற்படுத் தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான ஒரு இயக்கமாகும். நீண்ட இழுபறிக்கு பிறகு முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களால் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒன்றிய அரசின் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தை இயற்றினார். அப்போது அதை கடுமையாக எதிர்த்தவர்கள் யார்? இட ஒதுக்கீடு வழங்கிய வி.பி.சிங் தலைமையிலான அரசை கவிழ்த்தது யார்? அது பாரதிய ஜனதா கட்சி என்பது நாடறிந்த உண்மையாகும். சனாதனம், இந்து தர்மம், இந்து மதம் பற்றி எல்லாம் பேசிக் கொண்டிருக்கிற இவர்கள் இந்து மதத்தை சேர்ந்த பெருவாரியான மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கினால் அதை எதிர்ப்பது, அதை கொண்டு வந்த ஆட்சியை அகற்றுவது என்பது எவ்வளவு பெரிய மோசடி என்பதை இந்து மதத்தில் உள்ள பெருவாரியானவர்கள் உணர்ந்து கொள்ளாத காரணத்தினால் தான் அவர்களால் மாநிலத்திலும், மத்தியிலும் ஆட்சியில் அமர முடிகிறது. இவற்றையெல்லாம் பெருவாரியான இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது சமூக நீதியை வழங்குவதற்கான ஒரு ஏற்பாடு ஆகும். திராவிட இயக்கம் இருந்த காரணத்தினால், தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காரணத்தினால் அனைத்து மக்களுக்குமான சமூக நீதி வழங்கக் கூடிய வகையில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது. இந்திய அரசியல் சட்டம் முதன் முதலில் திருத்தப்பட்டது இந்த இட ஒதுக்கீட்டுக்காக தான். அதனை செய்த பெருமையை தமிழ்நாட்டுக்கு உண்டு.

எனவே தமிழ்நாட்டைப் போன்று பிற மாநிலங்களிலும் அனைத்து மக்களுக்குமான சமூக நீதி வழங்கக்கூடிய இட ஒதுக்கீட்டை மக்கள் தொகைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்திடவும் அதே போன்று ஒன்றிய அளவிலும், ஒன்றிய அரசின் இடஒதுக்கீடு அனைத்து நிலைகளிலும் சமூக நீதிக்காக நடைமுறைப்படுத்திடவும் சாதிவாரி கணக்கெடுப்பு மிக முக்கியமான ஒன்றாகும். எனவே ஒன்றிய மோடி அரசு ஏற்கனவே எடுக்கப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பை வெளியிட்டு அதன் அடிப்படையில் இடஒதுக்கீட்டு நடைமுறைப்படுத்த முன் வர வேண்டும். அல்லது புதிதாக விரைந்து சாதி வாரி கணக்கெடுப்பை நடத்தி சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகக் கூட்டம்!

திருவள்ளூர், அக். 5-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் திருவள்ளூர் அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் உள்ள ஆர்.எம்.கே கெஸ்ட் ஹௌசில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமை வகித்தார். மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ண சாமி எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே. ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச்செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.ஜெயபாலன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. ராஜேந்திரன், கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகா தேவன், எஸ்.காஞ்சனா சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.


இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

இதில் தொகுதி பார்வையாளர்கள் ஆர்.டி.இ. ஆதிசேசன், பழ.கணேசன், மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் சன்பிரகாஷ், புஜ்ஜி டி.ராம கிருஷ்ணன், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், ஜி.ஆர்.திருமலை, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, என்.இ.கே.மூர்த்தி, பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், ஜெயசீலி ஜெயபாலன், அமுதா பேபி சேகர், ஜோதிலட்சுமி, பரமேஸ்வரி கந்தன், ள் கே. சுரேஷ்குமார், வி.தியாக ராஜன், ஜி.எஸ்.சங்கீதா, ஏ.ஜெ. பவுல், கு.தமிழ்செல்வி, பெ. வினோத், ஒ.ஆர். நாகூர்கனி, டாக்டர் க.ராஜேஷ் குமார், பொறியாளர் எம்.மோகன், எஸ்.சௌந்தரராஜன், எம். இளையான், பிரவீன்குமார், த.குமரேசன், தணிகாசலம், சண்முகம், ப.குமரேசன், ஷாஜகான், ஆதிகேசவன், ஜாக்கப், பாக்கம் கருணாகரன், ஜி.சி.சி.கருணாநிதி, உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார் உள்பட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### து.ப. அழகமுத்து

### அக்டோபர் 5 (1987)



பழம்பெரும் சுயமரியாதை இயக்க செயல்வீரரும் – திருச்சி மாவட்டத்தில் கழகத்தை கட்டி வளர்த்த ஆரம்பகால தலைவர்களில் ஒருவர்.

1962ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – தி.மு.கழக அரசில் அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.

1952 முதல் 1955 வரை ஊராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.

1955ல் கருப்புக் கொடி போராட்டத்தில் கலந்து கொண்டவர். 1964ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

கழக நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. மூர்த்தி

### அக்டோபர் 5 (2001)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே கழகத்தில் இணைந்து பணியாற்றியதோடு, வேலூர் மாவட்ட அவைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் பேரூராட்சி தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


ஊழலில் திளைக்கும் அரசு வேண்டாம் என்ற

# மோடியின் அறிவிப்பு மெல்ல நகைக்கும் நேர்மை!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, அக். 5-

தெலுங்கானாவில் ஊழலில் திளைக்கும் அரசு வேண்டாம் என்று மோடியின் அறிவிப்பு ‘மெல்ல நகைக்கும் நேர்மை’ என்று தீக்கதிர் நாளேட்டின்தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.


தீக்கதிர்
2023 அக்டோபர் 4 புதன்கிழமை
மெல்ல நகைக்கும் நேர்மை!

இதுகுறித்து தீக்கதிரின் நேற்றைய (4.10.2023) தலையங்கம் வருமாறு:-

“ஊழலில் திளைக்கும் அரசு வேண்டாம்; வெளிப்படையான நேர்மையான அரசுதான் வேண்டுமென தெலுங்கானா மக்கள் நினைக்கின்றனர். மாநிலத்தில் பா.ஜ.க. அரசு அமைய வேண்டும் என்பதே அவர்களது விருப்பம்” என்று பிரதமர் மோடி, மகபூப்நகரில் நடைபெற்ற அரசு திட்டப் பணிகள் துவக்க விழாவில் ஞாயிறன்று பேசியிருக்கிறார்.

எல்லா மாநில மக்களும் ஊழலற்ற, நேர்மையான, வெளிப்படையான அரசு வேண்டும் என்பதை விரும்புவார்கள் என்பது உண்மைதான். ஆனால் அதற்கும் பா.ஜ.க.வுக்கும் வெகுதூரமாகி விட்டதே. அண்மையில் நடந்த கர்நாடக மாநிலத் தேர்தலில் 40 சதவீத கமிஷன் அரசு என்று பெயர் பெற்ற பா.ஜ.க. அரசு அகற்றப்பட்டதே, அதை வசதியாக மறந்துவிட்டார் பிரதமர். நாட்டின் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை 7.5 லட்சம் கோடி ரூபாய் முறைகேடு பற்றி, அம்பலப்படுத்தி ஒன்றிய பா.ஜ.க. அரசின் லட்சணத்தை வெளிப்படுத்தியதே! பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் வியாபம் ஊழல் முதல் எத்தனையோ வெளிவந்து நாடு முழுவதும் நாறியதே! அப்படியிருக்க, ஊழலற்றவர்கள் என்று எந்த வகையில் மார்தட்டுகிறார் மோடி?

அதேபோல வெளிப்படைத்தன்மை பற்றி மோடி முழங்குவதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி குவிப்பதில் முதலிடம் பிடித்திருக்கும் பா.ஜ.க.வுக்கு வெளிப் படைத் தன்மை எங்கேயிருக்கிறது? யார் யாருக்கு கொடுக்கிறார்கள் என்பதைத் தெரியப் படுத்தும் விதத்தில் நன்கொடை பெறும் சட்டம் இருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பாக சி.பி.எம். உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்திய போதும் அதைப் புறக்கணித்ததே ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதுதான் வெளிப்படைத் தன்மையா?

இது தவிர பி.எம்.கேர்ஸ் நிதி வசூலில் என்ன வெளிப்படைத் தன்மை இருக்கிறது? 2019-2022 வரையிலான மூன்று ஆண்டுகளில் வசூலானது ரூ.12,291.82 கோடி. இதில் இன்னும் செலவழிக்கப்படாதது ரூ.5415.65 கோடி. ஆனால் ஏற்கெனவே பிரதமர் நிவாரண நிதி எனும் முறை வழக்கத்தில் உள்ளது. இது தணிக்கைக்கு உட்பட்டது. ஆனால் இந்த பி.எம்.கேர்ஸ் நிதி அறக்கட்டளை எனும் பெயரில் தணிக்கைக்கு அப்பாற்பட்டது. இதில் எங்கேயிருக்கிறது வெளிப்படைத் தன்மை?

அது மட்டுமல்ல, அரசு நிர்வாகத்திலாவது வெளிப்படைத் தன்மை உள்ளதா? சிறப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடரில் என்னென்ன விவாதிக்கப் போகிறோம் என்பதைக் கூட வெளிப்படையாகச் சொல்லவில்லையே. நேர்மை பற்றிப் பேசும் பிரதமர், அதானி விஷயத்தில் நாடாளுமன்றத்தில் வாயே திறக்க வில்லையே. இன்னுமா இவரை மக்கள் நம்புவார்கள்! ரகசியம் தானே ஆர்.எஸ்.எஸ். -பா.ஜ.க. பரிவாரங்களின் நடைமுறை. பேசுவது ஒன்றும், செய்வது ஒன்றும் தானே அவற்றின் வாடிக்கை. இனியும் உங்கள் ஜம்பம் செல்லாது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

சேலத்தில் இளைஞரணி மாநாடு!

# சிவகங்கை மாவட்டத்தில் இருந்து பத்தாயிரம் பேர் பங்கேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தீர்மானம்!

சிவகங்கை. அக். 5-

சிவகங்கை மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் காரைக்குடியில் உள்ள மாவட்ட அலுவலகமான தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் ப சு ம் பொ ா ன் தா.கிருட்டிணன் அரங்கத்தில் மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் சென்ற மாதம் 17ஆம் தேதிவேலூரில் நடைபெற்ற மாநில இளைஞரணி தீர்மானங்கள் குறித்தும் மாநில இளைஞரணி செயலாளரும் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டம் வருகை குறித்தும் விளக்கிப் பேசிவரவேற்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ராஜா சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

இளைஞர் அணி என்பது கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபடும் அணிகளில் முக்கிய அணியாகும். இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொறுப்பேற்றதும் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் அவரது பணிகள் அமைந்துள்ளது. அவர் செயல்படுவதை இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் தலைவர்களும் உற்று நோக்கும் வகையில் இளம் தலைவராக விளங்கி வருகிறார்.

டிசம்பர் 17 சேலத்தில் நடைபெற உள்ள இரண்டாவது இளைஞர் அணி மாநாட்டினை இதுவரை நடைபெற்ற மாநாட்டினை மிஞ்சும் வகையில் நடத்த வேண்டும் என்று விரும்புகிறார். அதற்காக ஒவ்வொரு மாவட்டமாக சுற்றுப் பயணம் செய்து இளைஞர்களை மாநாட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்து வருகிறார். இதனால் இளைஞர்கள் மத்தியில் உற்சாகம் ஏற்பட்டுள்ளது. நமது மாவட்டத் திற்கும் விரைவில் வருகை தர உள்ளார். அந்தக் கூட்டத்தில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வெண்சீருடையுடன் பங்கேற்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறும் மாநாட்டில் நான்கு தொகுதியில் இருந்து பத்தாயிரம் பேர் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகளை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி. நிர்வாகிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும். தற்போது நாட்டில் ஜனநாயகத்தை காப்பற்றிட ஜனநாயகப் போர் நடைபெற்று வருகிறது.

ஜாதி மதம் பாராத அனைவரையும் சமமாக நடத்தும் ஆட்சி ஏற்பட வேண்டும். அதற்காக நமது முதல்வர் அவர்கள் இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சி தலைவர்களை யும் ஒன்றிணைத்து இந்தியா கூட்டணி ஏற்படுத்தி அந்த கூட்டணி இன்று வலுவாக அமைந்து உள்ளது.

தமிழகத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் முதல்வர் தலைமையில் ஒன்றாக உள்ளது போல் இந்திய அளவில் இந்த கூட்டணியும் வலுவாக அமைந்துள்ளது. இதற்கு மூலகாரணம் நமது முதல்வர். என்பதை உணர்ந்து பா.ஜ.க. அரசு தமிழக அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில்ஆட்சிக்கும், அமைச்சர்கள் மீது பல்வேறு அச்சுறுத்தல்களை களை ஏற்படுத்தி வருகிறார்கள். இதற்கு பயந்த இயக்கம் நமது இயக்கமல்ல. கொள்கை ரீதியான கட்டுப்பாடுடன் உள்ள இயக்கமாகும். கொள்கைக்காக இரண்டு முறை தனது ஆட்சியை இழந்துள்ளது.

**இரண்டரை ஆண்டு பொற்கால ஆட்சி!**

தலைவர் கலைஞர் அவர்கள் முன்னால் பிரதமர் இந்திரா காந்தி அவசரசட்டத்தினை கொண்டு வந்த பொழுது அதை எதிர்த்துகுரல்கொடுத்தவர்களில் அவரும் ஒருவர். அதனால் ஆட்சி இழப்பு ஏற்பட்டது. இலங்கை தமிழர்களின் உரிமைகளுக் காக போராடியதிலும் ஆட்சி இழப்பு ஏற்பட்டது. ஆட்சி போனாலும் அதை பற்றி கவலைப்படாத இயக்கம் தி.மு.க. இனம்,மொழி, உரிமைக்காக பாடுபடும் இயக்கம் தி.மு.க. அந்த லட்சியத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தை உருவாக்கினார். அவரது மறைவிற்குப் பின் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த கொள்கையில் இருந்து சிறிதும் மாறாமல் கட்டுப்பாட்டுடன் கழகத்தை நடத்தி வந்தார். அவர் மறைவிற்கு பின் இந்த இயக்கத்தை யார் நடத்துவார் வழிநடத்துவார் என்ற கேள்விக்குறி இருந்தது. அதை முறியடிக்கும் வகையில் தளபதி அவர்கள் கட்சித் தலைவர் பொறுப்பேற்று கட்சியையும், ஆட்சியையும், சிறப்பாக நடத்தி வருகிறார்.

இரண்டரை ஆண்டுகளாக பொற்கால ஆட்சி நடத்தி வரும் நமது தமிழக முதல்வர் அவர்களின் சாதனைகளை இளைஞர் அணியினர் வீடுதோடும் சென்று மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். சேலத்தில் உள்ள நடைபெற உள்ள இளைஞரணி மாநாட்டில் மூன்று லட்சம் பேர் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் இருந்து பத்தாயிரம் பேர் பங்கேற்று அதற்கு பெருமை சேர்க்க வேண்டும். மாநில இளைஞரணி தீர்மானத்தின்படி நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் தலைவர் கலைஞர் நூலகம் ஏற்படுத்தப்படும். இல்லம் தோறும் இளைஞர்களின் உறுப்பினர் சேர்க்கையில் இளைஞர் அணியினர் தீவிரம் காட்ட வேண்டும். தலைமை என்ன கட்டளை இடுகிறதோ அதை நிறைவேற்றும் முதல் மாவட்டமாக சிவகங்கை மாவட்டம் என்றும் இருந்து வருகிறது .அது தொடர்ந்திட வேண்டும். அதற்கு மாவட்ட கழகம் உங்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.சேதுபதி ராஜா, கே.எம். பொற்கோ, கார்த்தி, எஸ். எம்.மதிவாணன், பரணிகிட்டு முகமது மகாதீர் , ,மற்றும் ஒன்றிய ,நகர, பேரூர் ,கழக இளைஞரணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். முடிவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரணிகிட்டு நன்றி கூறினார். கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் கே. எஸ். எம். மணிமுத்து, காரைக்குடி நகர்கழக செயலாளர் என். குணசேக ரன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி ஒன்றிய செயலாளர் கே.ஆர்.ஆனந்த், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் கோட்டையூர் பேரூராட்சி தலைவர் கார்த்திக் சோலை ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

---

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா:-

# பொறியியல் - பள்ளி மாணவர்களுக்கு பேச்சு, கவிதை, வசனம் ஒப்பித்தல் போட்டி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, அக். 5-

நவீன தமிழகத்தின் சிற்பி முன்னாள் முதலமைச்சர் 50 ஆண்டுகள் தி.மு.கழகத்தின் தலைவர் பொறுப்பை நிறைவேற்றிய பன்முக திறனின் பேரடையாளம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தி.மு.க பொறியாளர் அணி சார்பாகப் பொறியியல் மாணவர்கள் பங்கேற்கும் விதமாகவும், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பாக 9, 10, +1, +2 வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் பங்கேற்கும் விதமாகவும் போட்டிகள் நடத்திட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதனடிப்படையில் தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி அளவில் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, ஐ.டி.ஐ. பயிலும் பொறியியல் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி சாயர்புரம் போப்ஸ் பொறியியல் கல்லூரியில் 06.10.2023 அன்று காலை 9.30 மணிக்கு துவங்கி நடைபெறும். போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000 இரண்டாம் பரிசு ரூ.5,000 மூன்றாம் பரிசு ரூ.3,000 வழங்கப்படும். இதில் முதல் மூன்று இடம் பெறுபவர்கள் மண்டல அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி பெறுவர்.



தேனி தெற்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனை கூட்டம் கம்பம் தனியார் மண்டபத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கம்பம் தொகுதி தலைமைக் கழக பார்வையாளர் தன செல்வம், மாநில கொள்கை பரப்புச் செயலாளர் பாண்டியன், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஈஸ்வரி பிச்சை, வடக்கு நகரச் செயலாளர் வீரபாண்டியன், தெற்கு நகர செயலாளர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அதேபோல் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் 9, 10, +1, +2வகுப்பு மாணவர்களுக்கான கலைஞரின் கவிதை, திரைப்பட வசனம் ஒப்பித்தல் போட்டி 07.10.2023 அன்று காலை 9.30 மணிக்கு ஏரல் ராசி திருமண மண்டபத்தில் துவங்கி நடைபெறும். போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசுரூ.5,000 இரண்டாம் பரிசு ரூ.3,000 மூன்றாம் பரிசு ரூ.2,000 வழங்கப்படும். மேலும் இருவருக்கு ஆறுதல் பரிசாக ரூ.500 வழங்கப்படும். இதில் முதல் மூன்று இடம் பெறுபவர்கள் மண்டல அளவில் நடைபெறும் போட்டிக்கு தகுதி பெறுவர்.

எனது தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிகளில் பொறியியல் மற்றும் பள்ளிமாணவர்கள் பங்கேற்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர், உறுப்பினர்கள், நகராட்சி மன்ற தலைவர்கள் உறுப்பினர்கள், மாநகராட்சி உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், ஊராட்சி மன்றதலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், வட்டம், வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.


இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பி. திருஞானசம்பந்தம்

**அக்டோபர் 5 (1983)**



**காளையார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராக பணியாற்றியவர்.**

**பாகனேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1968 முதல் 1974 வரை தமிழக சட்டமன்ற மேலவையில் கழக உறுப்பினராக பணியாற்றியவர்.**

**1966ஆம் ஆண்டு சிவகங்கையில் நடைபெற்ற ஒன்றுபட்ட இராமநாதபுரம் – மதுரை மாவட்டங்களின் கழக மாநாட்டில் தொண்டர்படைத் தலைவராக பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று 1963 முதல் 1965 வரை சிறையிலிருந்தவர். விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**‘கழகம் வளர்த்த கருப்பு தங்கம்’ என அப்பகுதி கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# தேனி மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் அறிவிப்பு!



தேனி, அக். 5-

தேனி வடக்கு மாவட்ட செயலாளர், தங்கதமிழ்ச் செல்வன் அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தேனி வடக்கு மாவட்ட செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம், னி தெய்வா ஹோட்டலில், இன்று (05.10.2023) மாலை 05 மணிக்கு நடைபெறுகிறது. இக்கூட்டத்தில், மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், வார்டு, கிளை கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மற்றும் கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. பாக முகவர்கள், பூத் கமிட்டி

2. இளைஞரணி மாநில மாநாடு

3. இல்லம் தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல்

4. மகளிர் உரிமை மாநாடு

5. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

தி.மு.க. மாணவர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 09.10.2023 திங்கட்கிழமை மாலை 5.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி மற்றும் இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில துணைச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்,

2. மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான பயிலரங்கம்,

3. ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் நியமனத்திற்கான நேர்காணல்,

4. தமிழ்நாடு மாணவர் மன்றம் ஏற்படுத்துதல்,

5. டெல்லியில் நடைபெறும் இந்திய அளவிலான மாணவர் கூட்டமைப்பின் சார்பில் நடைபெறும் பேரணி குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 4.10.2023

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



திண்டுக்கல் சிறுமலை பஞ்சாயத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, நத்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டியம்பலம், திண்டுக்கல் தெற்கு ஒன்றியச் செயலாளர் வெள்ளிமலை, திண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ராஜா மற்றும் துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# வாச்சாத்திப் பெண்கள் கற்பழிப்புகளும் அ.தி.மு.க. பெற்ற அன்பளிப்புகளும்!

"அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை; எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே அரசியல் செய்ய இதனைக் கையில் எடுத்துப் பிரச்சினை ஆக்குகிறார்கள்"…..என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் உண்மைகளை மூடி மறைக்க அன்றைய முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா கூறி நாடகம் நடத்தினார்.

"மலைக் கிராமத்திற்கு எப்படி வயதான நல்ல சிவன் சென்று இருக்க முடியும்? சி.பி.எம். செயல்பாடுகள் அரசியல் உள்நோக்கமுடையது "…என்று இடது கம்யூனிஸ்ட் கட்சியினரைப் பார்த்து அத்துமீறல்கள் நடத்திய அதிகாரிகளைப் பாதுகாக்கிற விதத்தில், அன்றைய வனத்துறை அமைச்சராக இருந்த செங்கோட்டையனும் சீறியபடிக் கிண்டல், கேலி செய்து, அதே சட்டசபையில் பேசினார். தி.மு.க.வின் இரு சட்டமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருந்த துறைமுகம் தொகுதி அ. செல்வராசன், எழும்பூர் தொகுதி பரிதி. இளம்வழுதி ஆகியோர் ஆவார்கள். அவர்களில் ஒருவரான பரிதி இளம்வழுதி எழுப்பிய கேள்வியை பேசவிடாமல், அ.தி.மு.க.வினர் அவையில் கூச்சல் போட்டனர்.

31 ஆண்டுகளுக்கு முன்னால், ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில், வாச்சாத்தியைச் சேர்ந்த 18 மலைவாழ் பெண்கள் அரசு அதிகாரிகளால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான செய்தியைத் தான் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் பேசப்பட்டு எதிரொலித்து வந்தன.

தர்மபுரி மாவட்டம் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி நகரங்களுக்கு இடையில் அமைந்த கல்வராயன். மலைத்தொடரின் அடிவாரப் பகுதியில் வாச்சாத்தி எனும் ஒரு சிறிய மலைக் கிராமமாகும். பெ.தாதம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட இக்கிராமத்தில் 1992 ஆம் ஆண்டுவாக்கில் சுமார் 655 பேர் வசித்து வந்தனர். இவர்களில் 400 பேர்க்கு மேல் விவசாயம் செய்து வந்த அவர்கள்; வனப் பகுதியைச் சார்ந்து வாழும் ஆதிவாசிகளான பழங்குடியின மக்கள் ஆவார்கள்.1992 ஆம் ஆண்டு ஜூன் 20 அன்று சந்தன மரம் வெட்டிக் கடத்துவதாகவும், விற்பனை செய்வதாகவும், சந்தன மரக் கடத்தல் வீரப்பனைத் தேடுவதாகவும் கூறி, 155 வனத்துறையினர் 108 காவல்துறையினர், 6 வருவாய் துறையினர் என 269 பேர் உள்ளடங்கிய கூட்டுக் குழுவினர் சோதனை எனும் பெயரால் மலைவாழ் மக்களின் வீடுகளில் புகுந்து சூறை ஆடினர். அந்தப் பகுதியில் ஏரிப் பகுதியில் பதுக்கி வைத்திருந்த சந்தனக் கட்டைகளை பறிமுதல் செய்கிறோம் என்று சுற்றி வளைத்து, 90 பெண்கள், 28 குழந்தைகள், 15 ஆண்கள் என மொத்தம் 133 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஏறக்குறைய 50 வீடுகள் சூறை மற்றும் மோட்டார்கள் நொறுக்கப்பட்டு கிணற்றுக்குள் வீசப்பட்டன. மக்களுடைய கால்நடைகளான ஆடு, மாடு மற்றும் கோழிகள் என அனைத்தும் அதிகாரிகள் கவர்ந்து சூறையாடி கிராமத்தில் இருந்து அரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஏரிக்கு கொண்டு சென்று உணவாக்கிக் கொண்டனர்.

அப்போது அவர்களுடன் பெண் காவலர் யாரையும் அழைத்துச் செல்லவில்லை. 18 பெண்களை வலுக் கட்டாயமாகக் கூட்டிச் சென்று, எந்தவித மனிதாபிமானமுமின்றி அவர்களைக் கூட்டுப் பாலியல் வன்முறை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. அவர்களில் 8மாதக் கர்ப்பிணிப் பெண், 13 வயது சிறுமி உட்பட இருந்தனர். அரூர் வனத்துறை அலுவலகத்திற்குக் கொண்டு சென்று 20.6.1992 இரவு 8 மணி முதல் மறு நாள் (21.6.1992) அன்று மாலை 5 மணி வரை, அடைத்து வைத்திருந்தனர்; சிலரைக் கொண்டு அடிக்கச் சொல்லி பலர் உடல் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டனர்.;

21.6.92 அன்று, மாலை 5 மணிக்கு நீதிமன்ற நடுவர் முன் நிறுத்தப்பட்டனர். அவர்களில் 5ஆண்கள் 26பெண்கள் என (27.8.92) வரை சேலம் மத்திய சிறைச்சாலையில் வைக்கப்பட்டு 2 மாதத்திற்குப்பின் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களிடம், சந்தன மரக் கடத்தல் செய்தார்கள் என்றும், அவையெல்லாம் பிடிபட்டுக் கைப்பற்றப்பட்டன என்றும், அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் பதிவு செய்த குற்றச்சாட்டில் பொய்க் குறிப்புகள் உருவாக்கி இருந்தனர்.

இச்செய்தியைப் பற்றி தமிழகத்தில் மனித உரிமைகள் ஓர் அறிக்கை 1996, (People watch Tamilnadu) மதுரையிலிருந்து வெளிவந்த ஆய்வு நூல் இதனை அம்பலப்படுத்தி செய்தியாக வெளியிட்டிருந்தது.

இப்படியான சம்பவம் குறித்துப் பாதிக்கப்பட்டவர்கள் அரூர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தும் வழக்குப் பதிவுச் செய்யப்படவில்லை. எனவே, உயர் நீதிமன்றத்தில் (22.9.92) வழக்கு போட்ட போது, அவ்வழக்கும் (1992 ஜூன் 30) அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தவுடன், உயர் நீதிமன்றத்தில் (22.9.92) விசாரணையைச் சந்திக்கக் கூறி அனுப்பியது. இதனால், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கப் பொதுச் செயலாளர் சண்முகம் மற்றும் நிர்வாகிகளும், நல்ல சிவன் என்ற இடது கம்யூனிஸ்ட் தலைவரும் உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டனர். அதற்குப் பின்னரே, வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இருந்தாலும், உரிய விசாரணை நடைபெறவில்லை என்று மத்திய புலனாய்வு அமைப்பிடம் விசாரணைக்கு ஒப்படைக்கக் கூறி வலியுறுத்திப் பாதிக்கப்பட்ட பெண்கள் 1993 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்குத் தொடர்ந்தனர். இதனை அடுத்து நீதிமன்ற உத்தரவின் பேரில் 1995ஆம் ஆண்டு பிப்ரவரி 24ஆம் தேதி வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட வனத்துறை, காவல்துறை, வருவாய்த் துறையினர் என மொத்தம் 269 பேர் கைது செய்யப்பட்டனர்.

வாச்சாத்தி பிரச்சினை விஸ்வரூபம் எடுத்த போது, தி.மு.க. கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகளை போராட்ட களத்தில் குதிக்க வைத்தார் தலைவர் கலைஞர். நாடு முழுக்க பொதுக்கூட்டங்கள், தீர்மானங்கள் இவற்றின் வாயிலாக ஜெ. அரசை கண்டித்து வந்தார். அது மட்டும் இல்லாமல், முரசொலியில் அவர், 'ஜெயலலிதா ஆட்சி பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டிற்குள்ளாகவே, அதற்குள் பல்வேறு ஊழல் புகார்களில் இந்த அரசு சிக்கி உள்ளது. அரசு நிலத்தை அடிமாட்டு விலைக்கு வாங்கியது; ஸ்பிக் பங்கு பேர ஊழல்; சாராய சாம்ராஜ்ய ஊழல்; அரசு பீர் தொழிற்சாலை டெண்டர் விடாமல் தனியாருக்கு வழங்கியது;

**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்



சொந்தமாக சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுடன் ஆட்சிக்கு வந்து, வைர வைடூரிய நகைகளையும் சேர்த்த ஊழல்; மதுரை அ.தி.மு.க. மாநாட்டில் கட்டாய வசூல்; ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கிய ஊழல்; ஆம்னி பஸ்களுக்கு வரி குறைப்பு ஊழல் என்று அடுக்கடுக்கான வினா எழுப்பிய கலைஞர்; அ.தி.மு.க. பெற்ற லஞ்ச லாவண்ய அன்பளிப்புகளை வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன் ஒரு பெண்ணுடைய ஆட்சியில் தான், ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா மீது திராவக வீச்சு, சிதம்பரம் காவல் நிலையத்தில் பத்மினி என்ற பெண் கற்பழிக்கப்பட்ட கொடுமை, வாச்சாத்தியில் 17 பெண்கள் கற்பழிக்கப்பட்ட அராஜகம் என்பன போன்ற சம்பவங்களை எல்லாம் சமாளிக்க முடியாத ஜெயலலிதா பெண்களுக்குப் பாதுகாப்பற்ற ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் என்று ஒரு நீண்ட பட்டியல் போட்டு எழுதி இருந்தார்.

இப்படியான கேள்விகள் கேட்ட கலைஞரைச் சமாளிக்க முடியாமல், கலைஞர் மீது, 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் தவறு நடந்ததாகக் கூறி முன்னாள் முதல்வராக இருந்த கலைஞர் மீது ஓய்வு பெற்ற நீதிபதி சிவசுப்பிரமணியம் தலைமையில் ஒரு விசாரணை கமிஷன் நியமித்தார். (அரசு குற்றச்சாட்டுகள் எதுவுமே நிரூபிக்க முடியவில்லை. கூறிய அத்தனை குற்றச்சாட்டிலும் எந்தவித உண்மையும் இல்லை என்று பின்னர் கமிஷன் அறிக்கை கூறியிருந்தது வேறு விவகாரம்.) ஆனால், இதனை அறிந்த எதிர்க்கட்சிகள் கண்டித்தன. வாச்சாத்திப் பிரச்சினை பேசி வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநிலச் செயலாளர் ஏ. நல்ல சிவன் எம்.பி, ஜனதாதள அர்கிஷோர் சிங் ஜெயலலிதா மற்றும் அவரின் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் பல பகிரங்கப்பட்டு உள்ள நிலையில், கலைஞர் மீது அரசியல் பழிவாங்கும் நோக்குடன் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு இருப்பது ஏன்? என்று தெரிவித்தனர். அதுமட்டுமில்லாமல் ஜனதா தள தலைவர்களில் ஒருவரான அர்கிஷோர்சிங் ஆகியோர் விடுத்த அறிக்கையில், ஜெயலலிதா அரசியல் பழிவாங்கும் நோக்குடன் இந்த விசாரணை கமிஷன் தி.மு.க. தலைவர் மீது அமைத்துள்ளார். இந்தச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாகக் கூறியிருந்தார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

அ.தி.மு.க. ஆட்சியில் பெண்கள் முன்னேற்றத்திற்காக ஜெயலலிதா பாடுபடுவதாகக் கூறி, அமெரிக்க நாட்டில் உள்ள நெவாடா மாநில ஆளுநர் பாப்மில்லர் பெயரால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. "…தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெயலலிதா பெண்களுக்குச் சமூக நீதி கிடைக்கச் செய்து முன்னேற்றப் பாதையில் அவர்களை அழைத்துச் செல்கிறார். தமிழ்நாட்டுப்பெண்களின் முன்னேற்றத்திற்காக கி.பி. 2000ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றுவதற்கான தொலைநோக்குத் திட்டங்களைத் தயாரித்துச் சமுதாய அபிவிருத்திப் பணியில் பெண்களையும் ஜெயலலிதா ஈடுபடுத்தி இருப்பது, சர்வதேச அளவில் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறது"… இப்படித்தான் அந்த ஆளுநருடைய அறிக்கை அமைந்திருந்தது. இதனை வைத்து அ.தி.மு.க.வினர் ஆகா… ஓகோ. என்று கட்டவுட்டுகள், விளம்பரங்கள் என்று ஜெயலலிதாவிற்குப் புகழாரங்களைச் சூட்டிக் கொண்டிருந்தனர். இதுகுறித்து தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் (26.2.1995) நாளது முரசொலி தலையங்கத்தில் சுட்டிக்காட்டி எழுதியதோடு, தர்மபுரி பெண்களின் பாதுகாவலரே ஜெயலலிதா தான்; ஜெயலலிதா பிறந்த தினத்தன்று பெண்கள் விஷயத்தில் ஜெயலலிதாவின் ஆட்சி நடத்தை எப்படிப்பட்டது? என்பதை விளக்கும் ஒரு உயர் நீதிமன்ற தீர்ப்பு அந்நாளில் ஏடுகளில் வெளியிட்டிருந்தது. அதுதான் தருமபுரி வாச்சாத்தியில் 18 பெண்கள் கற்பழிக்கப்பட்ட கொடுமையான செய்தி பற்றி உயர் நீதிமன்றம் அப்போது வெளியிட்டிருந்தது. அதையெல்லாம் சுட்டிக்காட்டி கலைஞர் அவர்கள் எழுதியிருந்தார்கள். தமிழ்நாட்டில் ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா முகத்தில் அக்னி திராவகம் வீச்சு., சிதம்பரம் காவல் நிலையத்தில் பத்மினி கற்பழிக்கப்பட்டது; ஒரத்தநாடு ரெங்கம்மாள் காவல் நிலையத்தில் கற்பழிக்கப்பட்டது என அந்தத் தலையங்கத்தில் எழுதி, கலைஞர் அவர்கள் கேள்வி எழுப்பி இருந்தார்.

இது குறித்து அமெரிக்கர்களுக்குத் தெரியாவிட்டால் என்ன? தமிழ்நாட்டு மக்கள் மனதில் ஆழமாகப் பதியும்படி ஜெயலலிதா பிறந்த தினத்தன்று பெண்கள் விஷயத்தில் ஆட்சியின் அவலட்சன நடத்தை எப்படிப்பட்டது? என்பதைத் தெளிவாக விளக்கியிருந்தார். "பெண்களின் பாதுகாவலரே ஜெயலலிதா "தான் என்பது போல, அமெரிக்க கவர்னர் பெயரால் செய்தி பரப்பப்பட்டதைச் சுட்டிக்காட்டி எழுதி இருந்தார். அந்நாளில் வாச்சாத்திப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டனர் என்பதைக் கண்டித்து எடுத்துக்காட்டி எழுதிடவும் அவர் தவறவில்லை என்பதையும் நினைவுபடுத்துகிறேன்.

சிறைக் காவலில் இருக்கும் போது கிராமத்தார்கள் சிறைக்குள் இருக்கும்போதே, 3 எஸ். டி.ஓ.ஆர். குற்றங்கள் அவர்கள் மீது பதியப்பட்டது. அவர்களின் பதிலில் திருப்திப்படாத உயர்நீதிமன்றம் புலனாய்வுத் துறை விசாரணைக்கு உத்தரவிட்டதன், காரணமாகக் காவல்துறை கண்காணிப்பாளர் தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கையில் குற்றவாளிகள் மீது இந்தியச் தண்டனைச் சட்டப் பிரிவு 143, 147, 149, 323 மற்றும் 427 மற்றும் தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் மீதான அடக்குமுறை தடுப்புச் சட்ட பிரிவு3 உட்பிரிவுகள் கீழும் சுமத்தியுள்ளனர். சி.பி.ஐ அறிக்கையில் குற்றங்களான கற்பழிப்பு, மான பங்கப்படுத்துதல், வன்முறை, முறையற்ற சிறை வைப்பு, பொது சொத்துக்கு நாசம் விளைவித்தல் போன்ற குற்றங்களிருந்து அதிகாரிகளைக் காப்பாற்றப் போலி ஆதாரங்களைத் தவறான தகவல்களால் உருவாக்கப்பட்டன என்று கூறப்பட்டது.

ஆதிவாசிகளின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் முகமாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் பல்வேறு உரிமைகளை அளித்திருக்கின்றன. உறுப்புகள் 15 (4),16 (4), 19 (5), 23, 29, 46, 164, 330, 332, 334, 335, 338, 339 (1), 371 (ஏ.பி.சி) ஐந்தாவது மற்றும் ஆறாவது அட்டவணைகள் ஆகியவை பழங்குடி மக்களுக்கு பாதுகாப்பாக அமைந்திருக்கின்றன. எனினும் இவற்றையெல்லாம் பயன்படுத்தாமல் அ.தி.மு.க. ஆட்சியில் அதிகாரிகள் ஆணவப் போக்குடன் நடந்து கொண்டனர் என்பதை குற்றச்சாட்டாக வைத்து ஏடுகள் தொடர்ந்து கேள்வி எழுப்பி வந்தன.

நடந்த உண்மைகளை மறைக்க எப்படி எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில், சாத்தான்குளம் காவல் நிலையத்தில் வைத்து தந்தை, மகன் கொல்லப்பட்டது, தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டில் 13பேர் இறந்த நிகழ்வு, பொள்ளாச்சியில் அ.தி.மு.க.வினரால் 200 பெண்களுக்கு மேல் பாலியல் வன்முறை நடத்திய விவகாரம். கொடநாடு கொலை, கொள்ளை விவகாரம், அதுபோல சூழ்ச்சிகள் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியிலும் தருமபுரி, இலக்கியப்பட்டியில் கோவையிலிருந்து பேருந்தில் வந்த வேளாண்மை கல்லூரி மாணவிகள் உயிருடன் எரித்து கொலை, கொடியன்குளம் துப்பாக்கிச் சூடு, கும்பகோணம் குளத்தில் மகாமகம் விழாவின்போது 100க்கும் மேற்பட்டோர் சாவு. இவைகளெல்லாம் மறந்து விடமுடியுமா? மத்திய புலனாய்வு அமைப்பினர் நடத்திய வழக்கு குற்றம் சாட்டப்பட்ட வனத்துறையினர், வருவாய்த்துறை, காவல் துறையினர் என மொத்தமாக 269 பேர் மீது 1996ஆம் ஆண்டு கோவை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பிறகு கிருஷ்ணகிரி நீதிமன்றத்திலும், அதன் பின் தர்மபுரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டும் தொடர் விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில்தான் 12 ஆண்டுகளுக்கு முன்னர், தருமபுரி மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி குமரகுரு 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் தேதி அரசு அதிகாரிகளுக்கு எதிரான குற்றம் நிரூபணம் ஆனதாகக் கூறித் தீர்ப்பு வழங்கினார்.

மத்திய புலனாய்வுத்துறை துணைக் கண்காணிப்பாளர் ஜெகந்நாதன் மற்றும் அவருடன் இருந்த குழுவினர் எடுத்துக்கொண்ட கடுமையான முயற்சியின் காரணமாக சம்பவம் நடந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு புலன் விசாரணை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. 269 குற்றவாளிகளுக்கு எதிராக 159 சாட்சிகள், சான்று ஆவணங்கள், விசாரணைக் குறிப்புகள், நீதிமன்றங்களில் மேல்முறையீடு, உண்மை அறியும் குழுக்களின் அறிக்கை என 31 ஆண்டுகள் இவ்வழக்கு நடந்து வந்தது. இவ்வழக்கு நடைபெறுவதற்கு பெரிதும் ஒத்துழைத்த மலைவாழ் மக்கள் அமைப்பு நல்லசிவன் எம்.பி., எம். அண்ணாமலை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பொதுநல அமைப்புகள், அனைத்துக்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள், நிர்வாகிகள் ஆகியோர் நீதி கிடைப்பதற்கு போராடியதால் இச்சமுதாயம் அவர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறது.

வன்புணர்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளக்காப்பட்ட 269 பேரில் 54 பேர் இறந்துபோயினர். அவர்களைத் தவிர 4 வனத்துறை (ஐ.எஃப்.எஸ்.) அதிகாரிகள் 17 வனத்துறையினரில் 12 பேருக்கு 10 ஆண்டு சிறைத்தண்டனையும், 5 பேருக்கு 7 ஆண்டு சிறை தண்டனையும் மற்றவர்களுக்கு ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து அதே ஆண்டு உயர் நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற அதிகாரிகள் மேல்முறையீடு செய்திருந்தனர். உயர்நீதிமன்ற நீதிபதி பி.வேல்முருகன் மேல்முறையீட்டு மனுவை ஏற்று தண்டனையை நிறுத்தி வைத்ததுடன் 2023 பிப்ரவரி மாதம் தீர்ப்புத் தேதி குறிப்பிடாமல், தள்ளி வைத்து விட்டுச் சம்பவம் நடந்த கிராமத்துக்கு கடந்த மார்ச் 4 ஆம் தேதி நேரில் சென்று பார்வையிட்டார். சம்பவங்களுக்குத் தொடர்புடைய இடங்கள், மக்களை நேரில் விசாரணை செய்யவும் முடிவு செய்து சென்றிருந்த அவர், அங்கு உள்ள பழங்குடிகள் தொடக்கப்பள்ளி, ஏரிப் பகுதி, ஆலமரம், தண்ணீர்த் தொட்டி, அரசநட்டம், கலசப்பாடி போன்ற கிராமப்பகுதிகள் மலைப்பகுதி ஆகியவையைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்துத் திரும்பினார்.

இந்நிலையில் தான், உயர் நீதிமன்ற நீதிபதி பி. வேல்முருகன் 12 ஆண்டுகளுக்குப் பிறகு அதே நாளான (29.9. 2023) தேதியில் சனிக்கிழமை அன்று தர்மபுரி கீழமை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்து குற்றவாளிகளான அதிகாரிகளுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கி உள்ளார். "…. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும்; இதில் 5 இலட்ச ரூபாயைப் பாலியல் வன்முறை செய்த குற்றவாளிகளிடம் இருந்து அரசு வசூலித்து வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட 18 பெண்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் சுய வேலைவாய்ப்பு அல்லது நிரந்தர வேலை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும். வாச்சாத்தி கிராமத்தினரின் வாழ்வாதாரத்தைத் தரம் மேம்படுத்த அரசு நடவடிக்கை குறித்த அறிக்கை அளிக்கப்பட வேண்டும்.

சம்பவ காலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் புகார் தந்த போது நடவடிக்கை எடுக்காமல் பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்; காவல் துறை கண்காணிப்பாளர்; மாவட்ட வனத்துறை அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி மேல் முறையீட்டு மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதுடன், குற்றவாளிகளை கைது செய்ய விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிடப்படுகிறது" என்று தான் வழங்கிய தீர்ப்பில் கூறியுள்ளார். இந்திய வரலாற்றில் குற்றம் புரிந்த அதிக அளவிலான அதிகாரிகள் மீது தண்டனை கொடுத்த வழக்கு வரலாறு இதைத் தவிர ஏதுவுமிருக்காது. காரணம், ஜெயலலிதா முதல்வராக இருந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது, அதிகாரிகள் சட்ட விரோதமாக செயல்படும் ஆட்சியாளர்களுக்குத் துணை போனதால்தான் இன்று இப்படியான தண்டனை பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

---

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# கழக சட்டத்துறை சார்பில் 2 -வது மண்டல பேச்சுப் போட்டி!

## செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவிப்பு

*சென்னை, அக். 5 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா" வினையொட்டி 2வது மண்டல பேச்சுப் போட்டி நடைபெறுகிறது. இது குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ, எம்.பி., விடுத்த அறிக்கை வருமாறு:-*

*தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி தி.மு.க. சட்டத் துறையின் சார்பில், சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக் குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பி ட்டுள்ளவாறு நடத்திட திட்டமிட ப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.*

*போட்டிகளுக்கான தலைப்புகள் பின்வருமாறு : -*

*1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி, 2. கலைஞரின் பார்வையில் மாநிலசுயாட்சி,*

*3. கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்*

*4. கலைஞரின் பார்வையில் தொழில் வளம்,*

*5.கலைஞரின் பார்வையில் கல்வி.*

*மேற்சொன்ன இந்த ஐந்து தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பினை போட்டி துவங்குவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பு போட்டி நடத்தும் நடுவர்கள் அறிவிப்பார்கள். அந்தத் தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிடவேண்டும்.*

*மாநிலம் முழுதும் உள்ள சட்டக் கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் முதல் மண்டல பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்த தற்போது 2வது மண்டலப் பேச்சு போட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரத்தின் படி நடைபெறும்.*

*போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசு*

*ரூபாய் 50,000 - தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், ரூபாய் 15,000/ தாமிரப் பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/ வெண்கலப்பதக்கம், சான்றிதழ் வழங்கப்படும்.*

*இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" வருகிற 6.12.2023 (புதன்கிழமை) அன்று நீலாங்கரை, "ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும்.*

*மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடை பெறும் நாளுக்கு முன்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.*

*இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/ தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு ரூபாய் 50,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/ தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.*

**பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்**

*கே.எஸ்.இரவிச்சந்திரன் (சட்டத்துறை இணைச் செயலாளர் சட்டத் துறை துணைச் செயலாளர்) 9840022250, ஜெ.பச்சையப்பன் சட்டத் துறை இணைச் செயலாளர் 98402-60178, கே.சந்துரு சட்டத் துறை இணைச் செயலாளர் 9444006999, கே.ஜே. சரவணன் தலைமைக் கழக வழக்கறிஞர் 9841057345*

*2 வது மண்டல பேச்சுப் போட்டி போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள் வருமாறு:-*

**7.10.2023 (மாணவர்கள்)**

*1) அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இடம்), 2). எஸ்.தங்கப்பழம், சட்டக் கல்லூரி, தென்காசி (தனியார்), 3) துளசி பெண்கள் சட்டக் கல்லூரி, தூத்துக்குடி (தனியார்) , முகில், சட்டக் கல்லூரி, கன்னியாகுமரி (தனியார்) , கலசலிங்கம் அகெடமி ஆப் ரிசர்ச் & எஜிகேசன்,* **08.10.2023 (வழக்கறிஞர்கள்)**

*திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு ஆகிய வட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள், இடம் - எல்.எஸ். மகால், ரஹமத் நகர், காமராஜ் நகர், பாளையங் கோட்டை, திரு நெல்வேலி டவுண்.*

*இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. அறிவித்துள்ளார்.*

---

## தொண்டாமுத்தூர் ரவி - திப்பம்பட்டி ஆறுச்சாமி பங்கேற்பு!

# கோவை வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் தென்னை சிவா அறிக்கை!

*கோவை, அக். 5 -*

*கோவை வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் தென்னை சிவா அறிக்கை வருமாறு:*

*கோவை வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு கலந்தாய்வு கூட்டம் 7.10.2023 - சனிக்கிழமை அன்று மாலை 3 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி தலைமையில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி வே.ஆறுச்சாமி முன்னிலையிலும் கோவை வடக்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் தென்னை சிவா ஆகிய நான் வரவேற்புரை ஆற்றவும் இந்தக் கூட்டத்தில் புதிதாக தலைமைக் கழகத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மற்றும் துணைத் தலைவர் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். முடிவில் மாவட்டத் துணை அமைப்பாளர் முரளி நன்றி கூற உள்ளார்.*

*கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொங்கு மண்டலத்தில் கொண்டாடுவது குறித்தும் நகர, ஒன்றிய, பேரூர்க் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்வது குறித்தும் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கழகத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான தளபதியார் அவர்கள் செய்திருக்கின்ற மகத்தான சாதனைகளை நமது ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடு வீடாக எடுத்துச் சொல்ல திண்ணைப் பிரச்சாரம் மூலம் பிரச்சாரம் செய்வது குறித்தும் விவாதிக்க உள்ளோம்.*

*இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன் .*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*




விவசாயிகளின் நலன்களைப் பாதிக்கும் மூன்று கருப்புச் சட்டங்களை இயற்றியதை எதிர்த்தும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் தொ.மு.ச. உள்ளிட்ட மத்திய தொழிற்சங்க அமைப்புகள், மாநில தொழிற்சங்க அமைப்புகள் சார்பில் அக்.3 அன்று அண்ணா சாலை தாராபூர் மாளிகை அருகில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## காவிரி ஒழுங்காற்று குழு 12-ந்தேதி கூடுகிறது

புதுடெல்லி, அக்.5-

காவிரி ஒழுங்காற்று குழு கூட்டம் டெல்லியில் வருகிற 12ந்தேதி கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் தமிழகம்-கர்நாடக அதிகாரிகள் மீண்டும் முறையிட உள்ளனர். காவிரி பிரச்சைனையில் கர்நாடக அரசு தொடர்ந்து பிடிவாதம் செய்து தேவையான தண்ணீரை திறந்துவிட மறுத்து வருகிறது.

கடந்த 28ந்தேதி நடைபெற்ற காவிரி மேலாண்மை கூட்டத்தில் வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி திறக்க வேண்டும் என்று உத்தரவிட்டதையும் கர்நாடகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த உத்தரவை ரத்து செய்யுமாறு வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் காவிரி ஒழுங்காற்று குழு கூட்டம் டெல்லியில் வருகிற 12ந்தேதி கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழகம் கர்நாடக அதிகாரிகள் மீண்டும் முறையிட உள்ளனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்!

## தொ.மு.ச. உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் பங்கேற்பு!

சென்னை, அக். 5 -

ஒன்றிய மோடி அரசாங்கம் விவசாயிகளின் நலன்களைப் பாதிக்கும் மூன்று கருப்புச் சட்டங்களை இயற்றியதை எதிர்த்து தலைநகர் புதுடெல்லியில் விவசாயிகள் ஒராண்டுக்கு மேலாக வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தினார்கள். அந்த வீரம் செறிந்த போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது ஒன்றிய இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா தெனி அவர்களின் மகன் காரை ஏற்றி விவசாயிகள் மற்றும் பத்திரிகையாளர்களை கொலை செய்தனர். இந்தத் தாக்குதலுக்குக் காரணமான ஒன்றிய இணை அமைச்சரை பதவியிலிருந்து நீக்க வலியுறுத்தியும், படுகொலை செய்யப்பட்ட விவசாயிகள் மற்றும் பத்திரிகையாளருக்கு வீர வணக்கம் செலுத்தும் விதமாக அக்டோபர் 3 அன்று நாடு தழுவிய கருப்பு தினம் மத்திய தொழிற்சங்க அமைப்புகள் துறை வாரி தொழிலாளர் அமைப்புகள், அகில இந்திய விவசாய சங்கங்கள் இணைந்து கருப்பு தினம் அனுசரிப்பது என எடுக்கப்பட்டதின் அடிப்படையில் இந்தியாவைத் தாண்டி சர்வதேச அளவில் 54 தொழிற்சங்கங்கள் இந்திய தூதுரகம் முன்னால் கருப்பு தினத்தை முன்னிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை அண்ணாசாலை தாராபூர் மாளிகை அருகில் தொ.மு.ச., ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., எச்.எம்.எஸ்., ஐ.என்.டி.யு.சி., உள்ளிட்ட மத்திய தொழிற்சங்க அமைப்புகளும் மாநில தொழிற்சங்க அமைப்புகளும் கருப்பு சட்டை அணிந்து கருப்புக் கொடியேந்தி, கீழ்க்காணும் கோரிக்கைகளை வலியுறுத்தி,

விலைவாசியை கட்டுப்படுத்து, உணவு, மருந்து, விவசாய இடுபொருட்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரியை (ஜி.எஸ்.டி.) நீக்க வேண்டும். பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு மீதான அதிகமான கலால் வரியை குறைக்க வேண்டும்.

கொரோனா பெருந்தொற்றுக்கு முன்னர் முதியோர், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், விளையாட்டு வீரர்கள் உள்ளிட்டோருக்கு ரயில் பயணத்திற்கு வழங்கிய சலுகைகளை திரும்பவும் வழங்க வேண்டும்.

பரந்த பொது விநியோகத் திட்டத்தையும், உணவுப் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

இலவச கல்வி, அனைவருக்கும் மருத்துவம், குடிநீர், அனைவருக்குமான சுகாதாரம் (கழிவறை), வசதி வழங்க வேண்டும். புதிய கல்விக் கொள்கையை ரத்து செய்ய வேண்டும்.

அனைவருக்கும் வீட்டு வசதியை உறுதிப் படுத்த வேண்டும்.

உழவர்களுக்கான நில உத்தரவாதம் செய்ய உயிரி பன்முகத்தன்மை சட்டம் மற்றும் விதிகள் வகை செய்கிறது. ஆகவே வனங்கள் சட்டத்தை கறாராக அமல்படுத்த வேண்டும். வனங்கள் (பாதுகாப்பு) சட்டம் 2023 திருத்தம் செய்வதை கைவிட வேண்டும்.

தேசிய குறைந்தபட்ச ஊதியமாக மாதம் ரூ.26,000/ வழங்க வேண்டும்.

இந்திய தொழிலாளர் மாநாட்டை தொடர்ச்சியாக நடத்திடல் வேண்டும்.

பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்குவதை நிறுத்த வேண்டும். தேசிய பணமயமாக்கல் திட்டத்தை கைவிட வேண்டும். கனிம சுரங்கங்கள் மற்றும் உலோக, நிலக்கரி சுரங்கங்களின் மூலம் கிடைக்கும் லாபத்தில் 50 சதவிகிதத்தை உள்ளூர் சமூகங்களான பழங்குடியினர் மற்றும் விவசாயிகளின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையில் சட்டத் திருத்தம் செய்ய வேண்டும்.

மின்சார சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும். முன்னதாக பணம் செலுத்திட வகை செய்யும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட வேண்டும்.

வேலைவாய்ப்பை அடிப்படை உரிமையாக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை நிரப்பிட வேண்டும். வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். மகாத்மா காந்தி ஊரக வேலை உத்தரவாதத் திட்டத்தை விரிவுபடுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும். (ஆண்டுக்கு 200 நாட்கள் வேலையும், நாளொன்றுக்கு ரூ.600 ஊதியம்) நகர்ப்புற வேலை வாய்ப்பை உறுதி செய்ய சட்டம் உருவாக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு விதை, உரம் மற்றும் மின் கட்டண மானியம் வழங்க வேண்டும். குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் சட்டப்பூர்வ உத்தரவாதம் வேண்டும். விவசாய விளை பொருட்களுக்கு (C2+ 50%) இரட்டிப்பு விலை வழங்க வேண்டும். உற்பத்தி செய்யும் பொருட்களை அரசே கொள்முதல் செய்து விவசாயிகளின் தற்கொலைகளிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

பெருமுதலாளிகளுக்கு ஆதரவான பிரதம மந்திரி “பாசல் பீமா யோஜனா” காப்பீட்டுத் திட்டத்தை திரும்பப் பெற்று பொதுத் துறை காப்பீட்டு நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த பயிர் காப்பீட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தி கால நிலை மாறுபாடு, வறட்சி, வெள்ளம், நோய்த்தாக்குதல் போன்றவைகளால் ஏற்படும் இழப்பை ஈடு செய்ய வேண்டும்.

கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் குடும்பத் தேவை சார்ந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பண்ணை விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

சிந்து எல்லைப் பகுதியில் வரலாற்று சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டத்தை தொடர்ந்து ஒன்றிய அரசு அளித்த எழுத்துப்பூர்வ உத்தர வாதத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். போராட்டத்தில் உயிரிழந்த தியாகிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். அந்தக் குடும்பங் களுக்கு மறுவாழ்வு திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். நிலுவையில் உள்ள வழக்குகளை திரும்பப் பெற வேண்டும். அஜய் மிஸ்ரா தெனியை தண்டிக்க வேண்டும்.

நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற வேண்டும். குறித்த கால வேலையர் முறையை திரும்பப் பெற வேண்டும். மற்றும் பணியில் ஈடுபடுவோர்க்கு சமநிலையினையும், பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். கேசுவல் முறையை கைவிட வேண்டும். வீட்டிலிருந்து பணிபுரிவோர், வீட்டுப் பணியாளர், கட்டுமான தொழிலாளர்கள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், திட்டப் பணியாளர்கள், விவசாயக் கூலித் தொழிலாளகள், நடைபாதை வியாபாரிகள், கடை மற்றும் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர், உப்பு தொழிலாளர், பீடி தொழிலாளர், ரிக்ஷா தொழிலாளி, ஆட்டோ, டாக்சி ஓட்டுனர்கள், மீனவ சமூகத்தினர் உள்ளிட்ட அமைப்புசாரா வினர்களை பதிவு செய்யவும், விரிவானதும், ஒய்வூதியத்துடன் கூடிய சமூகப் பாதுகாப்பு திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும்.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நல நிதியின் பங்களிப்போடு இ.எஸ்.ஐ. பலன்களுடன், சுகாதாரத் திட்டம், மகப்பேறு பலன்கள், இறப்பு மற்றும் இயலாமை கால பலன்களை இஷ்ரம் போர்ட்டலில் பதிவு செய்தவர்களுக்கு வழங்க வேண்டும்.

வீட்டுப் பணியாளர்கள் மற்றும் வீட்டுத் தொழிலாளர்களுக்கு ஐ.எல்.ஓ. தீர்மானத்தை அங்கீகரித்து, அவர்களுக்கு பொருத்தமான சட்டங்களை உருவாக்க வேண்டும். புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றிய விரிவான கொள்கையை உருவாக்க வேண்டும். நடை முறையில் உள்ள மாநிலங்களுக்கு இடை யிலான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு ஒழுங்கு முறை) சட்டம் 1979 வலுப்படுத்தி அவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டத்தை நடைமுறைப்படுத்தி அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

பெரு நிறுவனங்களுக்கான வரியை உயர்த்திடவும், பெரும் பணக்காரர்களுக்கு வரி விதிப்பு, செல்வ வரி விதிக்க வேண்டும்.

இந்திய அரசமைப்பு சட்டத்தின் பேச்சுரிமை, கருத்துரிமை, மதச் சுதந்திரம், பன்முக கலாச் சாரம், பல்வேறு மொழி, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு கூட்டாட்சி முறை ஆகியவற்றின் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

# தாய் நாட்டை தலைநிமிரச் செய்வோம்!

என் இனிய தமிழ் சொந்தங்களே.....என் நேசத்துக்கும் பாசத்துக்கும் உரிய இந்திய மக்களே.......! செடி ஒன்று முளைத்தால் அது மரமாக வேண்டும் அல்லது உரமாக வேண்டும். இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்கள் ஆலகால விஷத்தை குடித்து விட்டு இந்திய மக்கள் மாண்டு போக வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

1967 சட்டசபை தேர்தலில் தமிழ் மாநிலம் எப்படி ஒரு வரலாற்றை புரட்டிப் போட்டதோ அதே நிலையை 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய நாடு வரலாற்றை புரட்டிப் போட்டே ஆக வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. ஒன்றிய அரசியல் இந்த மாற்றம் ஏற்படாவிட்டால் இந்தியாவின் ஜனநாயகம் சவக்குழிக்குள் போய்விடும். பஞ்சமும் பட்டினியும் தலை விரித்தாடும். ஏழைகளின் குரல்வளைநெரிக்கப்படும். பணக்காரர்கள் கார்ப்பரேட்டுகள் கூத்தடிப்பார்கள். குத்தாட்டம் போடுவார்கள். அவர்களின் கால்களின் கீழே சமநீதி சமதர்மம் மதச்சார்பற்ற தன்மை அனைத்தும் மிதிபட்டு அழிந்து போகும். அகங்காரம் அக்ரஹாரத்தில் கோரத்தாண்டவம் ஆட ஆரம்பித்து விடும். சனாதன தர்மம் புதுப்புது வியாக்கியானங்களுடன் மாற்று மதங்களையும் அரசியல் கட்சிகளையும் ஏப்பம் விட்டே அழித்து விடும். தற்போது பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள செங்கோலை ஏந்துகின்ற ஒரு இந்திய மன்னர் இந்த மண்ணை ஆளத் தொடங்குவார். அது ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை விட கொடுமையானதாக இருக்கும். மடாதிபதிகளும், மைனாரிட்டி சமுதாயமும் மன்னருக்கு சாமரம் வீசி மகிழ்விப்பார்கள்.

சுதந்திரப் போராட்டம், சோசியலிசம், உரிமைக்குரல், மதசார்பின்மை, மாநில சுதந்திரம், உரிமைக்குரல், ஜனநாயகம் இவையெல்லாம் தண்டனைக்குரிய வார்த்தைகளாக கருதப்பட்டு அகராதியிலிருந்து அகற்றப்பட்டுவிடும். மாநில சட்டமன்றங்கள் மடங்களாக மாற்றப்பட்டு மடாதிபதிகள் கைகளிலே ஒப்படைக்கப்படும். மாநில மொழிகள் பேசுகின்றவர்கள் குற்றவாளிகளாக கருதப்பட்டு சிறைகளிலே அடைக்கப்படுவார்கள். பாலுக்கு அழுகின்ற குழந்தையிடம் இந்தியில் அழுதால் தான் பால் தருவோம் என்கிறார் ஷா அவர்கள். உரத்துக்காக காத்திருக்கும் விவசாயியிடம் எங்கள் புதிய விவசாய சட்டங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் உரம் தருகிறோம் என்று சொல்வார்கள். டாக்டருக்கு படிக்க விரும்புகின்ற மாணவ - மாணவியரிடம் எங்கள் நீட் சட்டத்தைஒப்புக் கொள்ளுங்கள் சீட் தருகிறோம் என்று சொல்வார்கள்.


மாநில உரிமைகளைக் கேட்டால் ஒரே ரேஷன் கார்டு திட்டத்திற்கு சம்மதம் தந்தால் உரிமை பற்றிப் பேசலாம் என்கிறார்கள். தாகத்துக்கு தண்ணீர் கேட்டால் ஒரே தேர்தல் என்ற எங்கள் சட்டத்தை ஏற்றுக் கொள்; ஆற்று நீர் பற்றிப் பேசலாம் என்கின்றனர். ஜி.எஸ்.டி. வரியில் மாநில பங்கை தாருங்கள் எனக் கேட்டால் எங்கள் புதிய குடியுரிமை சட்டத்தை அமல்படுத்திய பின் பார்க்கலாம் என்கிறார்கள்.

இந்திய அரசியலமைப்பு சட்டப்படி மதச்சார்பின்மையை கடைப்பிடியுங்கள் என்று சொன்னால் சனாதன தர்மத்தை ஏற்றுக் கொள் என்கிறார்கள். ஏடாகூடமான ஒன்றிய அரசின் கடந்த பத்தாண்டு ஆட்சி பல கோணங்களிலே ஜனநாயக விரோதமாகப் போகிறது என்பதை உலக அரங்கமே பேசுகிறது. அது உங்கள் காதுகளில் விழவில்லையா பாரத வாசிகளே! அதிகார துஷ்பிரயோகம் எல்லை கடந்து போய்விட்டதை உணரவில்லையா? இவற்றை இந்திய மக்கள் அறியாமல் இல்லை. அறிவார்கள்.

ஆனால் முற்றும் நனைந்த நிலையில் முக்காடு எதற்கு என்ற கேவலமான எண்ணத்தை ஏற்றுக் கொள்ள நினைக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் தாங்கள் பறி கொடுத்துவிட்ட அனைத்து சுதந்திரங்களையும் நினைத்து அஞ்சுகிறார்கள். பயம் அவர்களை வாட்டுகிறது. மடாதிபதிகள் இன்றைய நிலையில் மாநில அமைச்சர்கள் தலைகளுக்கே விலை வைக்கும் போது நாம் எம்மாத்திரம் என அவர்கள் நினைப்பது நியாயம்தானே? நீங்களும் இதனையே நினைக்கலாம். அச்சப்படலாம். ஒதுங்கியும் போய்விடலாம். நேற்று லட்சக்கணக்கான நமது மூதாதையர் உயிர் பலி கொடுத்து பெற்றுத் தந்த நம் உயிர் மூச்சான சுதந்திரத்தை இழப்பதற்கு நீங்கள் யார்? அந்த உரிமையை உங்களுக்குத் தந்தது யார்? என்று நாளைய நமது வாரிசுகள் உங்களைப் பார்த்துக் கேட்டால் அவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

மடாதிபதிகளுக்கும் மதவாதிகளுக்கும் மைனாரிட்டி சமுதாயத்துக்கும் பயந்து எங்கள் சுதந்திரத்தை அடமானம் வைக்க உங்களுக்கு எப்படி மனது வந்தது. நீங்கள் போராடிப் பெறாத சுதந்திரம் என்பதனால் அதனை பறிபோக விட்டு விட்டீர்களா எனக் கேட்க மாட்டார்களா? இப்படி ஒரு கேவலமான நிலை நமக்கு வேண்டாம் என்ற எண்ணம் உங்களுக்கு வருமா வராதா? பதில் சொல்லுங்கள் பாரதவாசிகளே? பெரும்பான்மையான நடுத்தர வர்க்கத்தினர் தங்களின் வாழ்க்கையின் பாதுகாப்பு மட்டுமே முக்கியம் என கருதுவர். இன்னும் சிலர் அதுவரை தான் சேமித்து வைத்த சேமிப்புகளை இழக்கக்கூடாது; அதை வைத்து அவமானப்படாமல் வாழ்க்கையை ஓட்டிவிட வேண்டும் என நினைப்பார்கள்.

ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன - நாம் சிக்கலில் மாட்ட வேண்டாம் என்று நினைத்து அராஜக அரசியலை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் கடந்த 10 ஆண்டு கால ஒன்றிய அரசின் ஆட்சியில் நடுத்தர மக்களின் கஷ்ட நஷ்டங்கள் நாளுக்கு நாள் ஏறுமுகமாகவும், வாழத் தகுதியற்ற நிலையும், அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றங்களும், ஒன்றிய ஆட்சியாளர்களின் அடாவடித்தனமான புதிய சட்டங்களும்...பொறுப்பற்ற ஆட்சி முறையும் மக்களை எரிச்சல் அடைய செய்திருப்பதை உலகமே பேசுகிறது. இது போதாது என்று மாநில அரசியல் வியாபாரிகள் தங்கள் தங்கள் கட்சியைப் பற்றியும் கூட்டணி பற்றியும் அதில் கிடைக்கப் போகும் லாபத்தை பற்றியுமே கவலைப்படுகிறார்கள். இந்தியாவின் அரசியல் சிஸ்டம் தடம் மாறிப் போய்க் கொண்டிருப்பது பற்றி அவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. மாற்றம் முன்னேற்றம் என்று பேசியவர்களே அதை



**வி.சி.குகநாதன்**
திரைப்பட
இயக்குநர்

யெல்லாம் மறந்துவிட்டார்கள். மக்களையும் தவறாக வழி நடத்தி தாமும் தடம் மாறிப் போய்க் கொண்டிருக்கின்றனர். அவர்களை நம்பினால் அசலுக்கே மோசம் விளையும்,! இவற்றை வென்றிட நமக்கு இருக்கின்ற ஒரே வழி...ஒரு விரல் புரட்சியே! அதனை செய்யக்கூடிய வலிமை இன்றைய சூழலில் திராவிட அரசியலுக்கு மட்டுமே உண்டு! தாய் நாட்டை மீட்க வேண்டுமானால் இந்தியக் கூட்டணியை வழிநடத்தும் தலைவர்களால் மட்டுமே முடியும்! மீண்டும் சொல்கிறேன் 1967 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் எதனைச் செய்து மாநிலத்தை தலை நிமிரச் செய்தார்களோ.....அதையே இந்திய மக்கள் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் செய்து நமது பாரத மாதாவின் ஜனநாயகத் தாலியை காப்பாற்ற வேண்டும்.

### அரியலூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், கழக

# மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!



அரியலூர் மாவட்டத்தில் தி.மு.க மாணவர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நாளை (06.10.2023 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள வாணி மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி தலைவர் இரா.இராஜீவ்காந்தி மற்றும் மாநில மாணவர் அணி துணை செயலாளர் வி.எம்.ஆனந்த் ஆகியோர் கலந்துகொண்டு நேர்காணல் நடத்துகிறார்கள், அதுபோது ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி பொறுப்பிற்கு விண்ணப்பித்துள்ளவர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

குறிப்பு:

நேர்காணலில் கலந்துகொள்ள வருபவர்கள் வயதிற்கான சான்றிதழ் கட்டாயம் கொண்டு வரவும்.

**அமைச்சர் சா.சி.சிவசங்கர்**
செயலாளர்
அரியலூர் மாவட்ட தி.மு.க.


# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கிருஷ்ணகிரி, அக். 5-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஓய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் தலைமையில் இன்று (05.10.2023) காலை 10.00 மணியளவில் ஒசூர் - தளி சாலையில் உள்ள சென்னீஷ் மஹாலில் நடைபெற உள்ளது. இந்த செயற்குழு கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகிப்பர்.



இந்த செயற்குழு கூட்டம் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள், கிளை செயலாளர்கள், பாகமுகவர்கள்(BLA2) கழக தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. டிசம்பர் 17 இளைஞர் அணி மாநில மாநாடு குறித்து, 2. அக்டோபர் 14, மகளிரணி மாநாடு குறித்து,

3. இளைஞர் அணி இல்லந்தோறும் உறுப்பினர் சேர்த்தல், 4. வாக்காளர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்தல் குறித்து, 5. BLA2, BLC(பாகமுகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள்) குறித்து 6. கழக ஆக்கப்பணிகள் இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சனாதன தர்ம விளக்கம்: வைக்கம் சென்ற காந்தி


## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

அலாவுதீன் அற்புத விளக்கைத் தேய்த்தால் பூதம் தோன்றுவது போல, சனாதனம், சனாதனம் என்று பேசினால் மக்களிடையே பெரும் சலசலப்பை உருவாக்கலாம் என்று ஆளுநரும், பா.ஜ.க. கட்சியினரும் நம்புகிறார்கள் போல தெரிகிறது. தமிழ்நாட்டில் அது கடினம். இங்கே என்ன புரிந்துகொள்கிறார்கள் என்றால் முற்போக்கான மாற்றங்களுக்கு முட்டுக்கட்டை போடுபவர்களே சனாதனிகள் என்று நினைக்கிறார்கள்.

விதவை மறுமணத்தை மறுத்தவர்கள் சனாதனிகள். அவர்களை சமூக வாழ்விலிருந்து விலக்கி வைத்து சித்திரவதை செய்தவர்கள் சனாதனிகள். குழந்தைத் திருமணத்தைத் தடை செய்யக்கூடாது என்று வாதிட்டவர்கள் சனாதனிகள். தேவதாசி முறையை ஒழிக்கக் கூடாது என்றவர்கள் சனாதனிகள். இன்றைக்கும் ஜாதி வேறுபாட்டை கட்டிக் காப்பவர்கள் சனாதனிகள்.

ஏனென்றால் சனாதனம் என்ற சொல்லின் பொருள் என்றைக்கும் அழியாதது, மாறாதது என்று கூறப்படுகிறது. அதனால் பிற்போக்கான சமூக ஏற்பாடுகள் எல்லாம் மாறக்கூடாது என்று நினைப்பதே சனாதனம் என்று கூறப்படுகிறது என்பதே பரவலான புரிதல். அதனால்தான் சனாதன ஒழிப்பு மாநாடு நடத்துகிறார்கள்.

இதைப் புரிந்துகொள்ளாததுபோல இந்து மதம் என்றால் சனாதனம், சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்பது இந்து மதத்தையே ஒழிப்பது என்றெல்லாம் கூக்குரல் போடுகிறார்கள். பெரிய பிரச்சினையாக்க வட நாட்டில் முயல்கிறார்கள். சனாதனம் என்று கேட்டால் ஏதேதோ




விளக்கங்களைச் சொல்கிறார்கள். இயற்கையை நேசிப்பது, இயற்கையுடன் இணைந்து வாழ்வது என்று கூட வெங்கையா நாயுடு கூறியுள்ளார். அப்படி ஒரு சனாதனம் இருந்தால் அதை ஏன் யாரும் ஒழிக்கப் போகிறார்கள்?

இது எப்படியென்றால் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும் பல சிறுவர்களில் மஞ்சள் சட்டை போட்ட சிறுவன் நிறைய குறும்பு செய்கிறான். பார்த்தவர் ஒருவர் மஞ்சள் சட்டை போட்ட சிறுவன் குறும்பு செய்தான் என்கிறார். அடுத்தவர் வீட்டுக்குள் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்த வேறொரு மஞ்சள் சட்டை அணிந்த சிறுவனைக் கூட்டி வந்து இவன் படித்துக்கொண்டுதான் இருந்தான் என்கிறார். முதலாமவர் இவனைச் சொல்லவில்லை. வேறு மஞ்சள் சட்டை போட்டவனைச் சொன்னேன் என்கிறார். இவர் அதெப்படி, நீங்கள் மஞ்சள் சட்டை என்றுதானே சொன்னீர்கள் என்று தகராறு செய்கிறார். இப்படி ஒரு குழப்பத்தைத்தான் பா.ஜ.க. தலைவர்கள் செய்து வருகிறார்கள். தமிழகத்தில் சனாதனம் என்றால் வர்ணாசிரம தர்மம், பெண்ணடிமைத்தனம், பிறவியிலேயே ஏற்றத்தாழ்வு போன்றவற்றை ஆதரிப்பதுதான்.

சனாதனம் என்றால் என்னவென்று புரிந்துகொள்ள கேரளா, தமிழ்நாடு மற்றும் இந்திய வரலாற்றில் செல்வாக்கு செலுத்திய வைக்கம் போராட்ட களத்துக்குச் சொல்வோம். வைக்கத்திலிருந்து ஆலயத்தைச் சுற்றிய தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள், ஈழவர்கள் நுழையக் கூடாது என்பதை சட்டமாக வைத்திருந்தார்கள். இவ்வாறான விலக்கம் தவறானது என்று ஒரு சத்தியாகிரக இயக்கம் காந்தி, நாராயண குரு ஆகியோர் ஆதரவுடன் துவங்கப்பட்டது. கேரள காங்கிரஸ் தலைவர்கள் கைதானார்கள். அந்த நிலையில் போராட்டத்துக்குத் தலைமையேற்று நடத்த காங்கிரஸ் தலைவர் பெரியாரை அழைத்



தார்கள். அவர் அங்கு சென்று தீவிரப் பங்கேற்பை வழங்கினார். கைது செய்யப்பட்டார்.

இருபத்தோரு மாதங்கள் நடந்த சத்தியாகிரகப் போராட்டத்தின் பன்னிரண்டாவது மாதம் காந்தி வைக்கம் சென்றார். பல தரப்பினரையும் சந்தித்துப் பேசி உடன்படிக்கை ஏற்படுத்த முயற்சி செய்தார். அந்த பேச்சுவார்த்தைகளில் ஒன்றுதான் 1925ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் தேதி இந்தன் துருத்தில் தேவன் நீலகண்டன் நம்பியாத்ரி இல்லத்தில் வைதீகர்களுடன் நடந்த உரையாடல். இந்த உரையாடல் பழ.அதியமான் அவர்கள் எழுதியுள்ள ‘வைக்கம் போராட்டம்’ நூலில் முழுமையாகத் தரப்பட்டுள்ளது.

### ஜெனரல் டயர் போன்றவர்கள் நீங்கள்!

காந்தி மிகுந்த பணிவுடனும், நேயத்துடனும்தான் நீலகண்டன் நம்பியாத்ரி உள்ளிட்டவர்களுடன் பேசுகிறார். காந்தியும் கடவுள் நம்பிக்கை உள்ளவர், இந்து மதத்தில் பற்றுக் கொண்டவர், சாஸ்திரங்களை ஏற்றுக் கொள்பவர், ஏன் வர்ணாசிரமத்தையும் அவர் புரிந்து கொள்ளும் விதத்தில் ஏற்றுக்கொள்பவர், மறுபிறவி, பாவ புண்ணியம் அனைத்தையும் ஏற்றுக்கொள்பவர். ஆனால் அவர் ஒரு சில தீண்டப்படாத ஜாதிகளை குறிப்பிட்ட தெருக்களில் நடக்க அனுமதிக்க மறுப்பது தவறு என்று கூறுகிறார்.


ஏன் தவறு என்று விளக்கச் சொல்லி வைதீகர்கள் தரப்பு கேட்கிறது. காந்தி இந்து மதத்தில் இவ்விதம் வேறுபாடு காட்டச் சொல்லி எங்கும் சொல்லியிருக்கவில்லை என்கிறார். வைதீகர்கள் பின்னர் நாங்கள் ஏன் அவ்விதம் கூறுகிறோம் என்று கேட்கிறார்கள். அதற்கு ஜாலியன் வாலாபாக்கில் படுகொலைகளை நிகழ்த்திய ஜெனரல் டயர் என்ற பிரிட்டிஷ் அதிகாரியைப் போன்றவர்கள் நீங்கள். அந்த டயர் இந்தியர்களை தங்களுக்கு சமமாகவே மதிக்கவில்லை. வெறுத்தான். அதைப்போலத்தான் நீங்களும் தாழ்த்தப்பட்ட மக்களை வெறுக்கிறீர்கள் என்று கூறுகிறார்.

வைதீகர்கள் தரப்பில் ஒரு விளக்கம் சொல்கிறார்கள். ஈழவர்கள், புலையர்கள் என தாழ்த்தப்பட்டவர்கள் சென்ற பிறவியில் செய்த பாவத்தால், தீமையால் இந்த பிறவியில் தாழ்த்தப்பட்டவர்களாக கடவுளால் பிறக்க வைக்கப்பட்டுள்ளார்கள். அது அவர்களுக்கான தண்டனை. அதனால்தான் நாங்கள் அவர்கள் பிறப்பை சார்ந்த விலக்கத்தைச் செய்கிறோம். அப்போதுதான் அவர்கள் தண்டனை நிறைவேறும் என்று கூறுகிறார்கள்.

காந்தி என்ன செய்கிறார் என்றால், அவர்கள் சொல்லும் எதையும், மறுபிறவி உட்பட மறுப்பதில்லை. இந்தப் பிறவியில் சக மனிதர்களான அவர்களை நீங்கள் தெருவிற்குள் வரக்கூடாது என்று விலக்கி வைக்கலாமா என்று மட்டும் கேட்கிறார். பின்னர் நீங்கள் அவர்களைப் பற்றிக் கூறுவது போல, அவர்களும் உங்களைப் பற்றிக் கூறினால் என்ன செய்வது என்று கேட்கிறார்.

**வைதீகர்கள் இல்லையில்லை; நாங்கள் சொல்வதெல்லாம் சங்கராச்சாரியார் சொல்வதுதான் என்று கூறுகிறார்கள். காந்தி அதற்கான ஆதாரத்தைக் காட்டுமாறு கேட்கிறார். நீங்கள் ஊரிலிருந்து கிளம்புவதற்கு முன் தருகிறோம் என்று சொல்கிறார்கள். காந்தி அது உண்மையில் சங்கரர் எழுதியதுதானா என்று பார்க்கவும், அதன் பொருளை விளக்கவும் வட நாட்டில் உள்ள சில பண்டிதர்களைக் கேட்டுப் பார்க்கிறேன் என்று கூறுகிறார். வைதீகர்கள் நாங்கள் சங்கராச்சாரியார் எழுதியது என்று எங்களுக்கு கூறப்பட்ட சில சுலோகங்களைத்தான் நாங்கள் தருவோம். அது அவர் எழுதியதா என்ற ஆராய்ச்சிக் கேள்வியெல்லாம் எங்களிடம் கேட்கக் கூடாது என்று கூறி பின் வாங்குகிறார்கள்.**

அடுத்து, வைக்கத்தில் பெரும்பான்மையோர் எங்களைத்தான் ஆதரிக்கிறார்கள் என்று வைதீகர்கள் கூறுகிறார்கள். அந்தத் தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைந்தால் தீட்டுப்பட்டுவிடும் என்பதை பெரும்பான்மையினர் ஏற்பதாகக் கூறுகிறார்கள். காந்தி வைக்கத்தில் வசிப்பவர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தலாமா என்று கேட்கிறார். ஒன்று சங்கராச்சாரியார் எழுதிய ஆதாரத்தைக் கொடுங்கள் அல்லது பொது வாக்கெடுப்பு நடத்த ஒப்புதல் கொடுங்கள் என்று கூறுகிறார். மூன்றாவதாக மற்றொரு வழியையும் கூறுகிறார். திவான் தலைமையில் ஓர் ஆய்வுக்குழு அமைப்பது. சத்தியாகிரகிகள் சார்பில் பண்டித மதன் மோஹன் மாளவியா. வைதீகர்கள் தரப்பில் ஒருவரை அவர்கள் கூறலாம். அந்த மூவர் குழு தீர விசாரித்து என்ன தீர்ப்பைக் கூறுகிறதோ அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறுகிறார்.



இது எதற்கும் வைதீகர்கள் ஒப்புதல் வழங்குவதில்லை. பேச்சுவார்த்தை தோல்வியில் முடிகிறது, மேலும் ஒன்பது மாத கால போராட்டத்திற்குப் பிறகு தெருக்கள் அனைவருக்கும் திறந்துவிடப்படுகின்றன.




**ராஜன் குறை கிருஷ்ணன்**
பேராசிரியர்
அம்பேத்கர் பல்கலைக் கழகம்,
புதுடெல்லி.


### சனாதனி யார்? காந்தியா அல்லது வைதீகர்களா?

இந்த விவாதத்தைக் கூர்ந்து கவனித்தால் ஒன்று புரியும். காந்தியும், வைதீகர்களும் பல அம்சங்களில் ஒன்றுபடுகிறார்கள், காந்தி அவர்கள் நம்பிக்கைகள் எதையுமே மறுப்பதில்லை. ஆனால், மனிதனை மனிதன் விலக்கிவைக்கும் தன்மையை மறுக்கிறார். தீண்டாமையை எதிர்க்கிறார். இதற்கெல்லாம் இந்து மதத்தில் இடமில்லை என்கிறார். அதைவிட முக்கியம், ஒரு பழக்கம் தவறென்று தெரிந்தால் அதனை மாற்றிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

சாத்திரங்கள் இப்படிக் கூறுவதாக சான்று காட்டினால் கூட அதன் உண்மைத்தன்மையை அறிய வேண்டும் என்கிறார். பாரதியார் கூறினாரல்லவா?

**சூத்திரனுக்கொரு நீதி தண்டச்**
**சோறுண்ணும் பார்ப்புக்கு வேறோருநீதி**
**சாத்திரம் சொல்லிடு மாயின் அது**
**சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்.**

அடுத்து காந்தி பொது வாக்கெடுப்பில் மக்கள் மனதை அறிந்துகொள்ளலாம் – அதன்படி முடிவெடுக்கலாம் என்றும் கூறுகிறார். அதாவது எது சாத்திரம் என்பதையே மக்கள்தானே ஏற்படுத்துகிறார்கள்?

மூன்றாவதாக ஒரு குழு அமைத்து ஆராய்ந்து முடிவு செய்யலாம் என்கிறார். அதில் சத்தியாகிரகிகளின் சார்பாக இந்து மகா சபா மதன் மோஹன் மாளவியா உறுப்பினராக இருப்பார் என்று கூறுகிறார். அவருக்கு ஒரு மன உறுதி உள்ளது. யார் அந்த குழுவில் இருந்தாலும் அவர்கள் உண்மையை, ஜாதி விலக்கத்தை ஒழிப்பதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறார்.

ஆனால் வைதீகர்கள் இது எதையுமே ஏற்கத் தயாராக இல்லை. தங்கள் கையில் சில சாத்திரங்கள் உள்ளன. அவை கூறுவதுதான் சட்டம் எனப் பிடிவாதம் பிடிக்கிறார்கள். அந்த பிடிவாதம்தான், மாற்றத்தை ஏற்க மறுக்கும் மனோபாவம்தான் சனாதனம். தமிழ்நாட்டில் சனாதனம் என்ற வார்த்தையின் பொருள் அதுதான்.

**காந்தி ஒரு மரபுவாதி. ஆங்கிலத்தில் இதை கன்சர்வேடிவ் (Conservative) என்று அழைப்பார்கள். சமூக நடைமுறைகளை ஏற்றுக்கொண்டு பாதுகாப்பது முதல் இயற்கையை, சூழலை பாதுகாப்பது வரை எல்லாமே கன்சர்வேஷன்தான். அரசியல் ரீதியாக மரபுவாதம், தொடர்ச்சியை வலியுறுத்தினாலும், மாற்றங்களே இல்லாத தொடர்ச்சியைப் பேசுவதில்லை.**

சனாதனம்தான் மாறாதது, அழியாதது என்று கூறி மாற்றங்களை முற்றாக மறுதலிப்பது. இந்தன் துருத்தில் நீலகண்ட நம்பூதிரிதான் சனாதனி. அவரைப்போல கால மாற்றத்தினை அனுசரிக்க மறுப்பவர்களைத்தான் எதிர்க்க வேண்டியது அவசியமாகிறது. காந்தி போல, நாராயண குரு போல வழிபாடுகளை செய்பவர்கள், இறை நம்பிக்கை உள்ளவர்கள் ஆகியவர்களை எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை. சமூக மாற்றத்தினை ஏற்பவர்கள், அதற்காக குரல் கொடுப்பவர்கள் துறவிகளாகவே இருந்தாலும் அவர்கள் சனாதனிகள் அல்ல.

இந்த வேறுபாடுகளைக் குழப்பி, பக்தி உணர்வை மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு முற்போக்காளர்கள் சனாதன எதிரிகள், அதனால் இந்து எதிரிகள் என்று சிலரை வர்ணித்து ஓட்டுகளை அறுவடை செய்ய பாஜக முயல்கிறது. காந்தி சனாதனியல்ல, மாற்றங்களை மறுப்பவர் அல்ல, ஆனால் பக்தியுடையவர், தன்னை இந்து என்று கூறிக்கொண்டவர் என்பதை மனதில் கொண்டால் நாம் பாஜகவின் திரிபு வேலைகளுக்கு மயங்க மாட்டோம். நாம் எதிர்க்க வேண்டியது இந்தன் துருத்தில் நம்பூதிரி போன்ற சனாதனிகளைத்தான்!

**காந்தி ஜெயந்தி தினத்தில் நாம் சரியான தெளிவைப் பெறுவோம்! சனாதன எதிர்ப்புக்காக தன் உயிரையும் கொடுத்தவர் அல்லவா அவர்!**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்

---

திருச்சி தெற்கு மாவட்டத்தில் – கழக

# பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி - கருத்தரங்கம்!

## கு.கருணாநிதி –கே.என்.சேகரன் – நிர்வாகிகள் பங்கேற்பு!

திருச்சி, அக். 5-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நுற்றாண்டு விழாவை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட மாநகர பொறியாளர் அணி சார்பில், மாநிலம் தழுவிய பேச்சுப் போட்டி மற்றும் கருத்தரங்கம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி, அரியமங்கலம் எஸ்.ஐ.டி. கல்லூரியில் நடைபெற்றது.

பொறியியல் மாணவர்களுக்கான மாநிலம் தழுவிய மாபெரும் பேச்சுப் போட்டி மற்றும் “நவீன தமிழ்நாட்டின் ஆர்க்கிடெக்ட்” தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. மாவட்ட பொறியாளர் அணி தலைவர் இ.தென்னரசு வரவேற்புரை வழங்கினார். மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.ஜியாவுதீன், மாநகர பொறியாளர் அணி அமைப்பாளர் சி.எம். மெய்யப்பன் தலைமை வகித்தனர்.

மாவட்ட மாநகர பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் த.நடராஜன், கோ.சிபிசக்கரவர்த்தி, ஆர்.பாலசுப்ரமணியன், ப.நவநீதகிருஷ்ணன், கோவி.செல்வராஜ், ஆ.அசோக், ஜெ. சாக்ரடீஸ், ஆர்.செந்தில்ராம், ஆர்.தினேஷ் கண்ணா, ஏ.மணிகண்டன்,ஏ.கிஷோர், எஸ்.ஷாஜஹான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருச்சி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இளங்கலை முதுகலை பயிலும் பொறியியல் மாணவர்கள், பாலிடெக்னிக் மாணவர்கள் ஐ.டி.ஐ. மாணவர்கள், “மாபெரும் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு கீழ்க்கண்ட தலைப்புகளில் தொழில்நுட்ப கல்விக்கு தோள் கொடுத்த கலைஞர், தொழில் துறையை உயர்த்திய தமிழின தலைவர், திராவிடம் மாடலும் திறன்மிக்க கல்வியும், தெற்குச்சூரியன், கலைஞரும் தமிழும் மாணவ - மாணவிகள் உரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளர்கள் பொறியாளர் அணி மாநிலச்செயலாளர் கு.கருணாநிதி, மாநகர கழக செயலாளர்மு.மதிவாணனும் கவிஞர் நந்தலாலாவும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்து, பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினர். இந்த நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநில அணி செயலாளர்கள் கே.என்.சேகரன், வண்ணை அரங்கநாதன், அ.த.த. செங்குட்டுவன், என்.செந்தில், பி.ஏ.நூர்கான், ஆறு.சந்திரமோகன், பொன்.செல்லையா, வி.சரோஜினி, எம்.தமிழ்ச்செல்வம்,

கே.கே.கே.கார்த்திக், ஆர்.மணிமேகலை, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள்:ஓ.நீலமேகம், கே.எஸ்.எம். கருணாநிதி, எஸ். சிவக்குமார், எம்.பழனியாண்டி, எம்.ஆர்.டி.பி. கே.தங்கவேல் கலந்து கொண்டனர். இறுதியாக மாநகர பொறியாளர் அணி தலைவர் மு.இன்பா நன்றியுரையாற்றினார்.




திருச்சி தெற்கு மாவட்டத்தில் – கழக பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி – கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கு.கருணாநிதி –கே.என்.சேகரன் – கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



நெல்லை மத்திய மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மேலப்பாளையம் பஜார் திடலில் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் நவ்ஷாத் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திராவிட தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், மாலைராஜா, லட்சுமணன், சு.சுப்பிரமணியன், சரவணன், பூ.சுப்பிரமணியன், விஜிலா சத்யானந்த்,மீரான் மைதீன், கருப்பசாமி கோட்டையப்பன், முகமது அலி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# அம்பத்தூர் எஸ்டேட் பகுதி தேசிய நெடுஞ்சாலையின் சீர்கேடான நிலை!

## ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரிக்கு டி.ஆர்.பாலு கடிதம்!

புதுடெல்லி, அக். 5 -

**சென்னை அம்பத்தூர் எஸ்டேட் மூன்றாம் சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் பகுதியாக உள்ளது. நாள்தோறும் ஆயிரக் கணக்கான வாகனங்கள் பயன்படுத்தும் இந்த முக்கிய சாலை கடும் சேதமடைந்த நிலையில் குண்டும் குழியுமாக இருப்பதால் வாகனங்கள், வாகன ஓட்டிகள், பொதுமக்கள் என அனைவரும் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர். எனவே, இந்த சாலையை உடனே சீரமைக்கக் கோரி டி.ஆர்.பாலு எம்.பி. ஒன்றிய அரசின் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரிக்கு அவசரக் கடிதம் எழுதியுள்ளார்.**



நிதின் கட்கரிக்கு இந்த பிரச்சினை தொடர்பாக நேற்று (4.10.2023) டி.ஆர். பாலு எம்.பி. எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு :

சென்னை அம்பத்தூர் எஸ்டேட் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கியமான சாலையின் படுமோசமான நிலைமை குறித்து 'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' ஆங்கில நாளிதழ் நேற்று (3.10.2023) வெளியிட்டுள்ள விவரமான செய்தியை இத்துடன் இணைத்துள்ளேன்.

**மூன்று ஆண்டுகளில் 700 விபத்துக்கள்!**

பல்லாயிரக்கணக்கில் கனரக வாகனங்கள், கார்கள், இருசக்கர வாகனங்கள் தினந்தோறும் பயன்படுத்தி வரும் இந்த நெடுஞ்சாலை பழுதடைந்து குண்டும் குழியுமாக காட்சி அளிக்கிறது. வாகன ஓட்டிகள் மட்டுமல்லாமல் இந்தச் சாலையை பயன்படுத்தும் மாநகர மக்கள் கடும் அவதிக்கு ஆளாகிறார்கள். சாலையின் புனரமைப்புப் பணி மாதக் கணக்கில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமல் தேங்கிக் கிடப்பதால் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லாத நிலையில் பலதரப்பு மக்களும் சாலையின் அவலநிலை குறித்து பெரும் அதிருப்தியில் உள்ளனர். இன்னும் சொல்லப்போனால் முக்கியமான இந்த அம்பத்தூர் எஸ்டேட் சாலை மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கு தகுதி இழந்த நிலையில் இருக்கிறது என்பதுதான் உண்மை.

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 700க்கும் மேற்பட்ட விபத்துக்கள் இந்த சாலையில் உள்ள தொலைபேசி இணைப்பகம் அருகில் உள்ள இடத்தில் நிகழ்ந்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த கடும் பிரச்சினையின் பொருட்டு அம்பத்தூர் பகுதியில் உள்ள பல்வேறு நலச் சங்கங்களும் கடந்த பல மாதங்களாக சாலை சீர் செய்யப்படாதது குறித்து தங்கள் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

**முன்னுரிமை அடிப்படையில் புதிய சாலை அமைத்திடுக!**

எனவே, "அம்பத்தூர் எஸ்டேட் சாலையின் மிக மோசமான நிலையை தங்களின் நேரடிக் கவனத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் விரைவில் அங்கு புதிய சாலையை மீண்டும் அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று டி.ஆர்.பாலு தனது கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**அமைச்சர் சேகர் பாபு வேண்டுகோள்!**

அம்பத்தூர் சாலையின் அவலநிலை குறித்து ஏற்கனவே பலமுறை நாடாளுமன்றத்தில் பேசி உள்ளார் என்பதும், தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்களும் இந்தப் பிரச்சினை குறித்து திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்களிடம் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரிக்கு டி.ஆர்.பாலு கடிதம் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வன உயிரின வார விழா!

# வண்டலூர் உயிரியல் பூங்காவில் சிங்கம், மான் உலாவிடங்களுக்கு செல்லும் சேவை!

## அமைச்சர் ம.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.5-

வண்டலூர் உயிரியல் பூங்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற வன உயிரின வார விழா தொடக்க விழாவில், பூங்காவின் சிங்கம் மற்றும் மான் உலாவிடங்களுக்கு பார்வையாளர்கள் செல்லும் சேவையை வனத்துறை அமைச்சர் ம.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு வனத்துறை சார்பில் வண்டலூர் உயிரியல் பூங்காவில் நேற்று முன்தினம் வன உயிரின வார விழா தொடக்கப்பட்டது. வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் பங்கேற்று விழாவைத் தொடங்கிவைத்தார். பூங்காவில் சிங்கம் மற்றும் மான்கள் உலாவிட பகுதிகளுக்குப் பார்வையாளர்கள் செல்வதற்கான ஏசி பேருந்து வசதி, கியூ ஆர் குறியீடு மூலம் நுழைவுச் சீட்டு பெறும் வசதி ஆகியவற்றை தொடங்கிவைத்தார். பின்னர், பூங்காவின் வனவிலங்கு மருத்துவமனையில் புதிய அறுவை சிகிச்சை அரங்கைத் திறந்துவைத்தார்.

பின்னர், முதுமலை புலிகள் காப்பகத்துக்கான புதிய இணையதளத்தையும் அமைச்சர் திறந்துவைத்தார். இந்த இணையதளம், காப்பகங்கள் பற்றிய விரிவான தகவல்களை வழங்குவதுடன், ஓய்வு இல்லங்கள் மற்றும் வனச்சுற்று போன்ற வசதிகளை ஆன்லைனில் பதிவு செய்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

முதுமலை புலிகள் காப்பகத்தில் நினைவுப் பொருட்களை ஆன்லைனில் வாங்கும் வகையில் புதிய இணையதளத்தையும் அவர் தொடங்கி வைத்தார். விழாவில், 'கழுவேலி மற்றும் உசுடு பறவைகள் சரணாலயங்கள்' என்ற நூல் வெளியிடப்பட்டது.

வண்டலூர் பூங்காவில் சிங்கம் மற்றும் மான் உலாவிடம் 147 ஏக்கர் பரப்பளவில் புதர் காடுகளுடன் அமைந்துள்ளது. கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020 ஆம் ஆண்டு சிங்கம் மற்றும் மான் உலாவிடம் மூடப்பட்டது. இப்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இந்த உலாவிடத்தில் 3 ஆண், 4 பெண் என 7 சிங்கங்கள் உள்ளன. பன்னர்கட்டா மற்றும் லக்னோ உயிரியல் பூங்காவிலிருந்து 2 சிங்கங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. மான் உலாவிடப் பகுதியில் ஏராளமான கடமான், புள்ளி மான் மற்றும் கேளையாடு மான்கள் உள்ளன.

இவ்விழாவில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஜி.செல்வம் எம்.பி., செங்கல்பட்டு எம்எல்ஏ வரலட்சுமி மதுசூதனன், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை செயலாளர் சுப்ரியா சாஹூ, வனத் துறை தலைவர் சுப்ரத் மஹாபத்ரா, தலைமை வன உயிரின காப்பாளர் சீனிவாஸ் ரெட்டி, உயர்நிலை வன உயிரின பாதுகாப்பு நிறுவன இயக்குநர் ஏ.உதயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# நெல்லையில் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## சு.சுப்பிரமணியன் முன்னிலையில்!

நெல்லை, அக். 5 -

நெல்லை மாநகர அலுவலகத்தில் வைத்து மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் பாசிச பா.ஜ.க அரசின் கொள்கையிலும் செயல்பாட்டிலும் வெறுப்படைந்த இந்து மக்கள் கட்சி நெல்லை மாவட்டத் தலைவர் ரமேஷ், வழக்கறிஞர் அணி துணை தலைவர் லத்திகாசரண் ஆகியோர் தலைமையில் இந்து மக்கள் கட்சியை இயக்கத்தைச் சார்ந்த 50 க்கும் மேற்பட்டோர் அந்த இயக்கத்தில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் சுப்பிரமணியன், நமச்சிவாயம், மாநகர அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் பெரியார், வெங்கடேஷ், ஸ்டார் முருகன், சிவா, நாதன், திராவிட மணி, ஷெட்டி, முத்து, அவதார் ஷாஜகான், பெப்சி சரவணன், அவதார் ஹுசைன், டவுன் அக்பர், செய்யது அலி, அஸ்லாம், ஸ்டார் அப்துல், பாபு, தளபதி ஆறுமுகம், வழக்கறிஞர் சுரேஷ் குமார், மகாராஜன் ரகுமான்சார் ஹமீம் முஸ்தபா, ராமச்சந்திரன், கணேச பெருமாள், வேலாயுதம், முருகன், பாடகர் அபு, குமார், சுடலைக்கண்ணு, ஐயப்பன் கார்த்திக்,கேபிள் குமரேசன், மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகர தி.மு.க. தொண்டரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா,கழக பவள விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் மேலப்பாளையம் பஜார் திடலில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழகம் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், தலைமையில் செயற்குழு உறுப்பினர் லட்சுமணன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், துபாய் சாகுல், அண்டன் செல்லத்துரை, நமச்சிவாயம், அப்துல்கையும், ஆமினாபீவி உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூரில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ், மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளை, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 01.10.2023 அன்று அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி. திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சேலம் மத்திய மாவட்டத்தில்

# தொண்டர் அணி நிர்வாகிகளுக்கான தேர்வு!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், அக். 5-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டத்தில் கழக தொண்டர் அணிக்காக 08.10.2023 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். இந்த தேர்வு மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் மாளிகையில் காலை 10.00 மணி முதல் பகல் 02.00 மணி வரை நடைபெற உள்ளது. தொண்டர் அணி தேர்வில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் 18 வயது முதல் 35 வயதுக்குட்டவர்களாகவும், எழுத படிக்க தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அவசியம் கழக நிர்வாகிகளின் பரிந்துரையோடு இளைஞர்களாக உள்ள கழக தோழர்கள் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மாநகரக் கழக தொண்டர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# கழக பவளவிழா - நலத்திட்ட உதவிகள் - மாபெரும் பொதுக் கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை! சு.சுப்பிரமணியன் தலைமை!

நெல்லை, அக். 5 -

நெல்லை மாநகர தி.மு.க. தொண்டரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா,கழக பவள விழா,நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் மேலப்பாளையம் பஜார் திடலில் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,மேலப்பாளையம் பகுதி துணை செயலாளர் ஆமினாபீவி,மாவட்ட துணை செயலாளர் ரம்ஜான் அலி, மாநகர தொழிலாளர் அணி சாகுல் ஹமீது,தொ.மு.ச சைபுதீன் வட்டச் செயலாளர் காஜா முகைதீன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாநகர தொண்டரணி அமைப்பாளர் சித்திக் வரவேற்பு ரையாற்றினார்.இந்நிகழ்வில் மாநில கொள்கை பரப்பு செயலாளர்,தமிழ்நாடு பாடநூல் கழகம் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

பின்னர் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது.

தமிழகத்தில் அ.தி.மு.க,பா.ஜ.க. கூட்டணி முறிந்துவிட்டது. இது குறித்து எடப்பாடி பழனிச்சாமி முனுசாமியை வைத்து பதில் கூறுகிறார். பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை தேசிய தலைமை முடிவு செய்யும் என்று கூறுகிறார். ஒரு கட்சி நடத்துவது என்பது சாதாரண விஷயம் அல்ல. ஒரு கூட்டணி எப்படி அமைய வேண்டும் என இந்திய அளவில் இந்தியா என கூட்டணி அமைய அச்சாரமிட்டு 2024 இல் யார் ஆட்சிக்கு வரக்கூடாது என தைரியமாக குரல் எளியப்பவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தான்.

பிரதமர் மோடி தமிழகத்திற்கு வரும் போதெல்லாம் அவர் பேசும் இடங்களில் திருக்குறளை கூறுவது,பழமொழிகளை கூறுவது,பாரதியார் பற்றி பேசுவது இதெல்லாம் தமிழ் மீது உள்ள பற்று அல்ல,தமிழக மக்களை ஏமாற்றும் செயலாகும். மோடியின் இந்த கனவை இந்தியா கூட்டணி முறியடிக்கும்.2014 இல் இருந்து இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்து வருகிறது.

**வாக்குறுதிகள் படிப்படியாக நிறைவேற்றம்!**

ஆனால் அவர்கள் கூறிய வாக்குறுதியில் ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லை.

ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமை தொகை ரூபாய் 1000,பெண்களுக்கு அது ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அதாவது அந்தப் பணத்தை சேர்த்து வைத்தால் தன்னுடைய மகளின் திருமணத்திற்கு பெரும் உதவியாக இருக்கும்.இது தான் "திராவிட மாடல்" ஆட்சியாகும். தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் பெண்கள் மீது அக்கறை கொண்டு மக்களுக்கான அருமையான திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார். சாதிய பொதுக் கூட்டத்தில் நாட்டை பிரிக்கும் சக்தியின் தலைமையமாக பா.ஜ.க. உள்ளது.இன்று மதவாதத்தை பா.ஜ.க. பரப்பி வருவதோடு,ஏழரைலட்சம் கோடி ஊழல் செய்ததை மறைப்பதற்காக சனாதனம் போன்ற கருத்துக்களை கூறி மக்களை திசை திருப்ப முயற்சித்து வருகின்றனர்.

இந்தியா கூட்டணி கண்டு மோடி பயந்து கொண்டிருக்கிறார். 2024ல் இந்தியா கூட்டணி தலைமையில் ஆட்சி உருவாகும். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டும் நபரே பிரதமராக வருவார்.

இவ்வாறு திண்டுக்கல் ஐ.லியோனி பேசினார்.

நிகழ்வில் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர்,நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா,மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், கிரிஜாகுமார், மேயர் பி.எம்.சரவணன்,

துணை மேயர் ராஜு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், தொண்டரணி துணை அமைப்பாளர் ரகுமான்ஷா, பகுதி கழக செயலாளர்கள் துபாய் சாகுல் (மேலப்பாளையம்) பூ.சுப்பிரமணியன் (தச்சை)நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை)மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப்பீரான்,மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.கா.மணி,

தச்சைப்பகுதி துணை செயலாளர் ஸ்டார் முருகன், வட்டச் செயலாளர்கள் தொப்பிகாஜா,முறுக்கு சாகுல்,கேபிள் குமரேசன், ஆறுமுகம்,இசக்கி,சடாமுனி, சாலி மௌலானா, அகமது பாதுஷா, உதுமான், மாமன்ற உறுப்பினர் ரம்ஜான் அலி, மாவட்டப் பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், வழக்கறிஞர் சுரேஷ்குமார், மகாராஜன், சைபுதீன்,பார்துரை, ஷெட்டி, தளபதி ஆறுமுகம், வெங்கடேஷ், கணேச பெருமாள், ராமச்சந்திரன் வினோத், மாநகரப் பிரதிநிதி சிவா, மஸ்தான்,

மேலப்பாளையம் பகுதி கழக நிர்வாகிகள் சாதிக், சமீன் முஸ்தபா, அபுல் காசிம், அலி பக்ருதீன், ஆட்டோ சுல்தான், அகமது, சிரிப்பு சேக், மீன் கனி, ஷேக் உஸ்மான், யாசின், புகாரி, புரோஸ் கான், சுரேஷ் குமார், மகளிர் அணி மேரி, அமிதா, பிந்த, ஆணி ரேக்லண்ட், ரேவதி அசோக், தலைமைக் கழக பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, திராவிட மணி, மைக் மணி, பாம்பு கிருஷ்ணன், மில் குமார், சி.பா.ராவணன் உள்பட கழகத்தினர், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மேலப்பாளையம் இளைஞரணி தர்வேஷ் அப்துல் காதர், விளையாட்டு மேம்பாட்டு அணி சிவராம் முத்துராமன் ஆகியோர் நன்றி உரையாற்றினர்.



மதுரை மாவட்டம் கிழக்குத் தொகுதி இரணியம் ஊராட்சியில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த தினத்தை முன்னிட்டு வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்ற போது எடுத்த படம். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, டி.ஆர்.ஓ. சக்திவேல், மாவட்ட ஊராட்சித் தலைவர் சூரியகலா கலாநிதி, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் மாவட்ட கவுன்சிலர் நேருபாண்டியன், மேற்கு ஒன்றிய சேர்மன் வீரராகவன், ஒன்றியச் செயலாளர் சிறைச்செல்வன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, பகுதி செயலாளர் மருதுபாண்டியன், ஊராட்சி மன்றத் தலைவர் கருப்பையா மற்றும் கிராம பொதுமக்கள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மேல்நிலைப் பள்ளிகளில் கணினி!.



# 38 இடம் பொருள் கலைஞர்

"அடுத்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டை 100 சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள மாநிலமாக மாற்றுவதோடு மட்டும் நாங்கள் மனநிறைவை அடையப் போவதில்லை. எங்கள் குறிக்கோள் இதைவிடவும் அதிகமானது. அடுத்த 10 ஆண்டுகளில் எங்கள் மாநிலத்தில் உள்ள அனைவரையும் கணினியைப் பயன்படுத்த அறிந்தவர்களாகச் செய்ய வேண்டுமென்பதே எங்கள் விருப்பமாகும். எனவே, அடுத்தக் கல்வி ஆண்டில் இருந்து பள்ளி, கல்லூரிப் படிப்பில் தகவல் தொழில்நுட்பவியலை ஒரு பாடமாக வைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்" என்று 1998-ஆம் ஆண்டு செப்டம்பர் 4-ஆம் தேதி, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தகவல் தொழில்நுட்பத் தொழிலதிபர்களின் கூட்டத்தில் அறிவித்தார், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர்.

ஆனால், அப்படி ஓர் அறிவிப்பை, 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்கிற விதத்தில் அவர் வெளியிட்டு விடவில்லை. அதைச் சொல்வதற்கு அவரிடத்தில் அழுத்தமான காரணங்கள் இருந்தன.

புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிவிக்கப் பட்டவுடன், உலக நாடுகளுக்கான மிகச் சிறந்த சந்தையாக 90-களில் இந்தியா உருவெடுத்தது. அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டது தமிழ்நாடு. அப்போது அண்ணா பல்கலைக்கழகம், இந்தியத் தொழில்நுட்பவியல் நிறுவனம், திருச்சி பிராந்தியப் பொறியியல் கல்லூரி மற்றும் சில தனியார் பொறியியல் கல்லூரிகள் மட்டுமே தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்புடைய பாடங்களை வழங்கி வந்தன. அதன் காரணமாக, ஆண்டுதோறும் 13 ஆயிரம் தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகள் வெளிவந்தனர்.

இதனால், தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பம் சீரான வளர்ச்சியைக் கண்டு வந்தது. 1994-1995 - இல் மென்பொருள் ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்கு 36 கோடி ரூபாய் என்கிற அளவில் இருந்து, 1997-1998-இல் 425 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்தது. கணினி ஹார்டுவேர் சாதனங்களை 750 கோடி ரூபாய்க்கு தமிழ்நாடு ஏற்றுமதி செய்திருந்தது. அந்த சமயத்தில் தமிழ்நாட்டிலிருந்த மென்பொருளாளர்களின் எண்ணிக்கை வெறும் 22 ஆயிரம் மட்டும்தான். ஆனால், அப்போதே அது இந்திய அளவில் மிக அதிகமான எண்ணிக்கையாக இருந்தது.



இவ்வாறு பலமாக இருந்த தொழில்துறைக்கு மட்டுமல்லாமல் கல்விக்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளின் மூலம், தகவல் தொழில்நுட்பத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணிக்கு வரமுடியும் என்ற நோக்கத்தில்தான், கலைஞர் மேற்கண்ட அறிவிப்பைச் செய்தார்.

## 360 டிகிரி முன்னேற்பாடு

மேற்கண்ட அறிவிப்பைச் செய்வதற்கு முன்னும் பின்னும் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை, கொஞ்சம் திரும்பிப் பார்த்தால், அவர் போன்ற தொலைநோக்குடன் இருந்த தலைவர்கள் இனி பிறப்பார்களா என்று சந்தேகம் தோன்றும்.

1996-இல் ஆட்சிக்கு வந்ததும், 1996-1997-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், கம்ப்யூட்டர் வளர்ச்சி தடைபட்டுவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் கம்ப்யூட்டர் கருவிகளுக்கு முந்தைய ஆட்சியில் விதிக்கப்பட்டிருந்த 12 சதவிகித வரியை நான்கு சதவிகிதமாகக் குறைத்து பொருளாதார அளவிலே கணினிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார் கலைஞர்.

பிறகு 1997-1998-இல் இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னையில் 'டானிடெக்' **(தமிழ்நாடு இன்ஸ்டிட்யூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி - TANITEC)** என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் மூலம் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், மென்பொருள் மற்றும் வன்பொருள் பொறியியல், மல்டிமீடியா, டிஜிட்டல் டெக்னாலஜி போன்ற படிப்புகள் வழங்கப்பட்டன. அதே 1997-இல் தகவல் தொழில்நுட்பக் கொள்கையும் வகுக்கப்பட்டது. பிறகு, 1998-99-ஆம் ஆண்டு 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.352.08 இலட்சம் செலவில் கணிப்பொறி வழங்க உத்தேசிக்கப்பட்டது.

> 1996 செப்டம்பர் 30 அன்று தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத் துறையில் இணையப் பயன்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, அமைச்சர் தமிழ்க்குடிமகன், கலைஞருக்கு தமிழில் மின்னஞ்சல் செய்தார். அதற்கு கலைஞரும் மின்னஞ்சலில் தமிழில் வாழ்த்தினார். இவ்வாறு வளர்ந்து வந்த தகவல் தொழில்நுட்பத் துறையில் தன்னையும் இணைத்துக் கொண்டார் தலைவர்.

கல்லூரி அளவில், அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் இளம் அறிவியல் கணிப்பொறி (பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ்) பாடத்தினை ஒரு பாட வகுப்பாகத் தொடங்கி, படிப்படியாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. 1998- ஆம் ஆண்டிலேயே 25 அரசு கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன. 1998-1999-ஆம் ஆண்டு கூடுதலாக 10 கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடவகுப்பு தொடங்க உத்தேசிக்கப் பட்டது.



# மேல்நிலைப் பள்ளிகளில் கணினி!

## தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படை

தொழில்துறை அளவில், இந்தியாவிலேயே முதலாவது தகவல் தொழில்நுட்ப மையமாக அமைந்த **'டைடல் பார்க்'** தொடர்பான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டன. சமூக அளவில், 1998-இல் மாநிலத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் சுமார் 13 ஆயிரம் சமுதாய இணைய மையங்களை அமைத்திட, இந்திய தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னோடியாக விளங்கிய **சாம் பிட்ரோடா** தலைவராக இருந்த 'வேர்ல்டு டெல்' நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டது.

பண்பாட்டு அளவில், 1999-ஆம் ஆண்டு பிப்ரவரியில், **'தமிழ்நெட்- 99'** என்ற தலைப்பில், உலகத் தமிழ் இணைய மாநாடு நடைபெற்றது. அதில் தமிழ் கீ-போர்ட், தமிழ் எழுத்துருக்கள் தொடர்பான பிரச்சினைகள் சார்ந்து விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## வளர்ச்சிக்கான அறிவிப்பு!

இப்படி ஒரு பலமான அஸ்திவாரத்தை எழுப்பிய பிறகு, 1999- 2000-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மிக முக்கியமான ஓர் அறிவிப்பைச் செய்தார் கலைஞர்.

"பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பது அரசின் விழைவாகும். நிபுணர்களின் கருத்துகள் அடிப்படையில் பாடமுறையை உருவாக்கி, கணினியில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் மூலம், கணினிகளை நிறுவி, மாநிலம் முழுவதுமுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12 வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் வரும் கல்வியாண்டில் இருந்து தொடங்கப்படும். இதனால், ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி 40 மாணவர் என்ற அடிப்படையில், சுமார் 48 ஆயிரம் மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் துறையில் வேலை பெறும் வாய்ப்பிற்குத் தகுதியுடையவர்களாவார்கள்" என்று அறிவித்தார்.

தொடர்ந்து, 1999-ஆம் ஆண்டு அக்டோபர் 5 அன்று, 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறி மையங்கள் தொடங்கப்பட்டன. இதை அன்றைய குடியரசுத் துணைத்தலைவர் கிருஷ்ண்காந்த் தொடங்கி வைத்தார். சுமார் 112 கோடி ரூபாயில் சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில், இந்த மையங்களைத் தொடங்கி வைத்து உரையாற்றிய கலைஞர் இப்படிச் சொன்னார்:

"இப்போது சில பள்ளிக்கூடங்களிலே கரும்பலகையே இல்லை. கணினி வேறா என்று யாராவது கேட்கக் கூடும். கணினிதான் இனிமேல் கரும்பலகைகளாக மாறும்".

எவ்வளவு சத்தியமான வார்த்தைகள். இன்று தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகள் 'ஸ்மார்ட்' வகுப்பறைகளாக மாறி வருவதற்கு கலைஞர் போட்ட அடித்தளம்தான் காரணம் என்பது வரலாற்று உண்மை..!

...வலம் வருவோம்


### சாதாரண தொண்டரும் மதிக்க மாட்டார்!

"பா.ஜ.க. மாநிலத்தலைவர் பதவியில் இல்லாவிட்டால் சாதாரண தொண்டனாக பா.ஜ.க.வில் தொடர்வீர்களா?" என ஒரு பத்திரிகையாளர் கேட்டார். அண்ணாமலையிடம் கேட்கப்பட்ட சிறந்த கேள்விகளுள் ஒன்று அது! இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக அந்தப் பெண் பத்திரிகையாளரை மிக மோசமாக அவமதித்திருக்கிறார், கிரிமினல் அரசியல்வாதி அண்ணாமலை.

சுற்றி நின்ற எந்தப் பத்திரிகையாளரும் இந்தக் கேள்வியில் என்ன தவறு இருக்கிறது. சரியான கேள்விதானே என்று சொல்லவில்லை. அண்ணாமலை போன்ற அடிப்படை சமூக அறிவற்றவர்கள் பொது வெளியில் குறிப்பாக, பத்திரிகையாளர்களிடம் அடாவடியாக நடந்து கொள்வதற்கு காரணம் மொத்த ஊடகங்களும் **'மோடி மீடியா'**வாக மாறிப் போனதும், கனிமம், கல்வி போன்ற வணிகங்களில் ஈடுபடுவோர் தங்கள் தொழிலைக் காப்பாற்றிக் கொள்ள ஊடக நிறுவனங்களை நடத்துவதுமே காரணம்.

இப்போது இந்தக் கேள்வியைக் கேட்டவர் பணியில் இருக்கிறாரா எனத் தெரியவில்லை. அண்ணாமலை தலைவரான பின்னர் பல சீனியர்களை ஓரம் கட்டியதோடு தன் கைத்தடிகளை மட்டுமே கட்சியில் வைத்து, அடாவடி செய்து கொண்டிருந்தார். அவர் பதவி யில் இல்லாவிட்டால், தொண்டனாக அவரை எவரும் மதிக்கமாட்டார்கள் என்கிற யதார்த்தமான உண்மையை இந்தக் கேள்வி உடைத்துக் காட்டுகிறது. **-பத்திரிகையாளர் அருள் எழிலன் ஃபேஸ்புக் பதிவு**

### ஃப்ளாஷ்பேக்



### குளிக்கச் செல்லும் பெரியார்!



அசோகன்

1956-ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம், துறையூரில், இந்தித் திணிப்பை எதிர்த்தும் ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடரவும் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. அப்போது, திருச்சிக்கு வருகை தந்த பெரியார், ஆசிரியராக இருந்த என் தாத்தாவைச் சந்தித்து, எங்களுடைய வீட்டில் தங்கியிருந்தார். இருவரும் நீண்ட நாள் நண்பர்களாகவும் இருந்தார்கள். வீட்டில் தங்கியிருந்த சமயத்தில் குளியலறைக்குச் செல்லும் வழியை என் தாத்தா திரு.பெருமாள் அவர்கள் பெரியாரிடம் காட்டும்போது இந்தப் படம் எடுக்கப்பட்டதாக என் குடும்பத்தினர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். மிகவும் அரிய இந்தப் படத்தைக் கவனமாகப் பாதுகாத்து வருகிறேன்.

**-வெ.அசோகன், முன்னாள் வங்கி ஊழியர், ஈரோடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### குலக்கல்விக்கு எதிராகப் போராட்டம்!

**1952-ஆம் ஆண்டு, சென்னை திருவான்மியூரில், 'சலவைத் தொழிலாளர் மாநாடு' நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அப்போதைய முதலமைச்சர் இராஜாஜி, தமிழ்நாட்டில் 'குலக்கல்வி திட்டம்' கொண்டு வரப்படும் எனக் குறிப்பிட்டார். "அவரவர் சாதித் தொழிலை அவரவர் செய்ய வேண்டும். எல்லா சாதியினரும் படிக்கவேண்டும் என்றால் – அத்தனை பேருக்கும் உத்தியோகம் எங்கே இருக்கிறது. ஆதலால், சாதி முறைதான் நல்லது" என்றார். அதன் பின்னர் கிராமப்புறங்களில் 6 ஆயிரம் பள்ளிக்கூடங்களையும் இழுத்து மூடினார். இந்தத் திட்டத்துக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுத்தார் தந்தை பெரியார்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம் 260




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131